குழந்தைகள் பத்திரிகை

4-1-1976

60 காசு

கோகுலம்



கோகுலம்

மலர் 4 ✲ இதழ் 20

ஜனவரி 4, 1976

ராட்சஸ, மார்கழி 20

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்

சந்தா விகிதம்
இந்தியா

ஒரு வருடம்	ரூ. 15.00
ஆறு மாதம்	ரூ. 7.50

இதர வெளிநாடுகள்


ஒரு வருடம்	ரூ. 33.00
ஆறு மாதம்	ரூ. 16.50

புத்தாண்டுத் தீர்மானங்கள்



குதூகலமான ஒரு குடும்பத்தை உருவாக்குவது அதன் தலைவியான இல்லத்தரசியும் அவள் பெற்ற செல்வங்களான குழந்தைகளும்தான். பொருள் தேடி வந்து கொடுப்பது அப்பாவின் கடமை. அந்த வருவாய்க்குள் வாழ்க்கை நடத்தத் திட்டமிடுவது அம்மா. அந்த வாழ்க்கையை இனிமையாக்குவது — குழந்தைகள்தான். அதுவும் பெண் குழந்தைகளான நீங்கள் தாயின் மனம் அறிந்து இங்கிதமாக நடந்தீர்களானால் பெற்றோர்களுக்கு அதைவிடப் பாக்கியம், பெருமை வேறில்லை.

தாய்க்கு உதவியாக இருங்கள், 'எழுந்திரு' என்று பிறர் குரல் கொடுக்குமுன் துயில் நீங்கி, வீட்டு வாசலைப் பெருக்கிச் சுத்தம் செய்து கோலமிடும் பொறுப்பை அம்மா சொல்லாமல் நீங்களாகவே ஏற்றுக் கொண்டால் எத்தனை சந்தோஷப்படுவாள் அம்மா? ஏதாவது குற்றேவல்களைக் கூறினால் முகத்தில் அடித்தது போல் 'முடியாது' என்று கூறாதீர்கள். முடியாததானாலும் முயன்று பாருங்கள். யாருடனும் சிடுசிடுப்பாகப் பேசாதீர்கள். உங்களைக் கேலி செய்தாலும் புன்சிரிப்புடன் பதில் கூறப் பழகிக் கொள்ளுங்கள். உங்களைவிட வயதில் பெரியவர்களிடம் மரியாதை காட்ட மறக்காதீர்கள். பிறரிடம் ஏதாவது குறை இருக்குமானால் அதைக் குத்திக் காட்டிப் பேசாதீர்கள். பிறர் மனம் எப்படிப் புண்படும் என்பதை நினைத்துப் பார்த்தால் மற்றவரைக் கேலி செய்யத் தோன்றாது. பெண்களுக்கே உரிய



குணம் சகிப்புத் தன்மை. அதை மறந்து விடாமல் இருந்தால் எத்தனையோ இக்கட்டான சந்தர்ப்பங்களைச் சாதுரியமாகச் சமாளிக்கலாம்.

எப்போதுமே சுத்தமாக இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். சுத்தம் சுகம் தரும். பிறரைப் பாராட்டப் பழகிக் கொள்ளுங்கள். சிறிய விஷயமாக இருந்தாலும் அதைப் பெரியது போலப் பாராட்டினால் அவர் உற்சாகமடைவார். உங்களை உயர்வாக மதிப்பார். அவர் திறமையும் வளரும். எப்போதும் எதிலும் யாரிடமும் குறை காணும் குணம் பெண் குழந்தைகளான உங்களுக்குக் கூடவே கூடாது.

வீட்டில் பெற்றோர் இல்லாதபோது யாராவது தேடி வந்தால் அவர்களை மரியாதையுடன் வரவேற்று உபசரித்து வந்த காரியத்தைக் கேட்டுத் தக்கபடி பதில் கூறி அனுப்புங்கள். தேடி வந்தவரைச் சந்திக்க முடியாத ஏமாற்றத்தைக்கூட உங்களுடைய பண்பான உபசரிப்பாலும் பதிலாலும் மறந்து அவர் மகிழ்ச்சியோடு திரும்புவார்.


கடவுள் பக்தி அவசியம். தினம் கோயிலுக்குப் போக முடியாவிட்டாலும் வீட்டிலேயே கடவுள் படத்தின் முன் விளக்கேற்றி வைத்து வணங்குவதை வழக்கமாகக் கொள்ளுங்கள்.

எப்போதுமே பெண் குழந்தைகளான நீங்கள் இப்படியெல்லாம் வாழப் பழக்கிக் கொண்டீர்களானால் ஒவ்வொரு குடும்பத்திலும் மகிழ்ச்சி மலரும். உங்கள் வாழ்வும் வளம் பெறும். — எம். சாந்தா

எரி நட்சத்திரத்தை விண்ணிலே

மூன்னூற்று முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கிறிஸ்துமஸ் பண்டிகையன்று காலையில் ஒரு குழந்தை பிறந்தது. குழந்தையைப் பார்த்து மகிழ அதன் அப்பா இல்லை. சில மாதங்களுக்கு முன்புதான் இறந்து போயிருந்தார் அவர். பிறந்த குழந்தையோ மிக மிகச் சிறியதாக நோஞ்சானாக இருந்தது. பிரசவம் பார்த்த மருத்துவச்சி அந்தக் குழந்தை பிழைக்குமென்று நம்பவில்லை. ''இதென்ன குழந்தை? பீர் குடிக்கும் குவளைக்குள் இதைப் போட்டு வளர்க்கலாம். அத்தனை சின்னது!'' என்றாள் அலட்சியமாக. அந்த இத்தனூண்டுக் குழந்தை பிற்காலத்தில் உலகம் வியக்கும் ஒப்பற்ற விஞ்ஞானியாகத் திகழப் போகிறது என்பதை அவள் அறியவில்லை. செயற்கரிய செயல்கள் பல செய்யப் போகிறது அந்த நோஞ்சான் குழந்தை என்பது அப்போது யாருக்குத் தெரியும்?

மருத்துவச்சி நினைத்தபடி அந்தக் குழந்தை மரித்துவிடவில்லை. பிழைத்துக் கொண்டது. வளர்ந்து பெரியவனும் ஆயிற்று. இதற்குள் அதன் அம்மா வேறு ஒருவரைக் கல்யாணம் செய்துகொண்டுவிட்டாள். ஆகவே பாட்டியின் பாதுகாப்பில் வளர்ந்தான் பையன். பள்ளிப் படிப்புத் தொடர்ந்தது. ஒரு மருந்துக் கடைக்காரரின் வீட்டில் தங்கிப் படித்து வந்தான். அப்போது அவனுக்குப் பன்னிரண்டு வயது. 'விஷமக் கொடுக்கு' என்பார்களே அந்த வகையைச் சேர்ந்தவனாக விளங்கினான். மருந்துக் கடைக்காரர் ஒவ்வொரு நிமிஷமும் பயந்து நடுங்கிக் கொண்டிருப்பார். தன் வீட்டில் தங்கியிருக்கும் பையன் இன்று என்ன புதிய சாகஸம் செய்யப் போகிறானே என்று. எதற்கும் அஞ்சாத பயல், விநோதமான செயல்கள். கத்தி, உளி, அரிவாள், கத்தி இப்படிப்பட்ட பொருள்கள்தான் அவன் விளையாட்டுச் சாமான்கள். அந்த ஊரில் காற்றாடி யந்திரம் விசேஷம். நீர் இறைக்கப் பயன்படும் ஏற்றம் போலச் செயல்படும் அது. அதன் யந்திர நுணுக்கங்கள் எல்லாம் பையனுக்கு அத்துபடி. அவன் தங்கி இருந்த மருந்துக் கடைக்காரர் வீட்டுக்கு அருகே அப்படியொரு காற்றாடி யந்திரம் (விண்ட்மில்) அதே மாதிரி ஒரு யந்திரத்தைத் தானே உருவாக்குவது என்று முடிவு செய்தான். அது மற்றவைகளிலிருந்து மாறுபட்டிருக்கும் என்றும் கூறினான். தான், உருவாக்கப் போகும் யந்திரம் பிராணியின் சக்தியினால் இயங்குவதாக இருக்கும் என்றான். வெறும் வாய்ப் பேச்சு வீரனா அவன்? அதுதான் இல்லை. சொன்னபடியே





பறக்க விட்ட பையன்!

தான் திட்டமிட்டிருக்கும் யந்திரத்தின் ஒரு குட்டி மாடலைத் தன் வீட்டுக் கூரைமீது அமைத்தேவிட்டான். அதன் மிதிசக்கரத்தின் (Tread Wheel) மீது ஒரு சுண்டெலியை வைத்தான். சக்கரத்துக்கு மேலாக ஒரு சோளக் கொண்டையைக் கட்டித் தொங்கவிட்டான். சோளத்தைத் தின்னும் ஆசையினால் சுண்டெலி பாய்ந்து தாவும் போது அதன் கால்கள் சக்கரத்தைச் சுழலச் செய்தன. சோளம் அதன் வாய்க்கு எட்டவில்லை. எலி ஓடிக் கொண்டே இருந்தது, சோள மணிகளைப் பிடிக்க. சக்கரம் சுழன்று கொண்டே இருந்தது. இயந்திரமும் இயங்கியது. பையனின் வேலைத்தனம் எப்படி ?

இப்படி ஏதாவது புதிய புதிய குறும்புகளைச் செய்வதிலே விருப்பம் உடையவனாக விளங்கினான் பையன். ஒரு நாள் மருந்துக் கடைக்காரருடைய மச்சானிடம், ''உங்களிடம் உள்ள அந்தக் காலிப் பெட்டியைக் கொடுங்கள். அதைச் சரியான நேரம் காட்டும் ஒரு கடிகாரமாக மாற்றித் தருகிறேன். நேரம் தெரியாததினால்தானே நீங்கள் கடைக்குத் தாமதமாக வருகிறீர்கள்'' என்றான். அப்படியே ஒரு கடிகாரத்தைத் தயாரித்தான். மணி காட்டும் அதன் கைகள் சொட்டுச் சொட்டாக விழும் நீர்த்துளிகளால் இயங்கின. ஒவ்வொரு நாளும் காலையில் கடிகாரம் ஓடப் பாத்திரத்தில் நீரை நிரப்புவான் பையன்.

அடுத்து அந்தப் பையன் தானியங்கும் ஒரு வண்டியைத் தயாரித்தான். ஓட்டுபவரின் கை, கால்களின் இயக்கத்தினால் வண்டி ஓடியது. துரதிர்ஷ்டவசமாக அந்த வண்டி வழுவழுப்பான சம தரையில்தான் ஓடிற்று. மேடும் பள்ளமும் குண்டு குழியுமான கரடுமுரடான ரஸ்தாக்களில் ஓட மறுத்து விட்டது.

பெரிய பட்டத்தைக் கொண்டு விண்வெளியிலே பயணம் செய்ய வேண்டும் என்ற ஆவலும் கொண்டான் இந்தப் பையன். அது சாத்தியமாயிற்றே, இல்லையோ! தன் பட்டத்தைக் கொண்டு பட்டிதொட்டி மக்களைப் பீதி கொள்ளச் செய்தான். எப்படி ? பட்டத்தின் வாலிலே விளக்குகளைக் கட்டி இருளிலே அதைப் பறக்கவிட்டான். கருவானத்திலே ஒளியோடுகூடிய ஒரு பொருள் இங்குமங்கும் அலைவதைக் கண்டு எரிநட்சத்திரங்கள்தான் விண்ணிலிருந்து விழுவதாக மயங்கினார்கள் மக்கள். இந்தப் பையனின் இந்த விஷமங்கள் எல்லாம் சின்ன வயதுச் சில்லுண்டித் தனங்கள்தான். கொஞ்சம் பெரியவனானதும் கவிதைகள் புனையலானான். கரித் துண்டுகளைக் கொண்டு தன் படுக்கையறையின் உள் சுவர்களிலே ஏதேதோ படங்களை வரைவான். ஆனால் இதையெல்லாம் கண்ட அவன் சுற்றத்தார் அவன் பெரிய கவிஞனாகவோ ஓவியனாகவோ வரவேண்டும் என்று விரும்பவில்லை. பிழைக்க வேண்டுமானால் நிலத்திலே பாடுபட வேண்டும் என்றே கருதினார்கள். நோஞ்சானாகப் பிறந்தவன் இப்போது கட்டுமஸ்தான உடலும் தோற்றமும் கொண்டவனாக விளங்கினான். ஆகவே, அவன் அம்மா அவனைப் படித்தது போதும் என்று கூறி நிலத்தில் பாடுபடக் கிராமத்துக்கு அனுப்பினாள். மகன் சிறந்த விவசாயியாக வரவேண்டும் என்பது அவள் விருப்பம். சந்தைக்குப் போய்ப் பொருள்களைப் பேரம் பேசி வாங்கும் கலையிலே தேர்ச்சி பெற வேண்டும் என்று வேலைக்காரியுடன் வாரத்துக்கு ஒரு நாள் மகனை அனுப்பி வைப்பாள். ஆனால் பையன் நகரத்துக்குப் போனதுமே வேலைக்காரியிடம் நைச்சியமாகப் பேசித் தனக்காகப் பொருள்களை வாங்கி வரும்படி அனுப்பி விடுவான். ''திரும்பி வரும் போது இதோ இங்கேயேதான் இருப்பேன் ; மறக்காமல் கூட்டிக் கொண்டு போ'' என்று கூறித் தான் கொண்டு வந்துள்ள புத்தகங்களிலே மூழ்கிப் போவான்.

ஒரு நாள் பையனின் இந்த வேலைத்தனத்திலே சந்தேகம் கொண்ட அவனுடைய மாமா அவன் அறியாமல், அவனைப் பின் தொடர்ந்தார். பையன் சந்தைக்குப் போகாமல்

ஊருக்கு வெளியே உள்ள வயல்வெளியில் புல்தரையில் மரத்தடியில் ஹாய்யாகக் காலை நீட்டிப் படுத்தபடி புத்தகங்களைப் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். பையனின் படிக்கும் ஆர்வத்தைக் கண்ட மாமா மறுபடியும் அவனைப் படிக்கும்படி பள்ளிக்கு அனுப்பினார்.

பதினெட்டாவது வயதில் கல்லூரியில் சேர்ந்து படிக்கத் தொடங்கி விட்டான் அந்த பையன். சிறு வயதில் செய்த விஷமங்களும், புதிய புதிய பொருள்களைக் கண்டு பிடிக்கும் ஆராய்ச்சி மனப்பான்மையும் தீவிரம் அடைந்தன. ஒரு சமயம் நகரத்தில் பொருட்காட்சி நடந்தது. என்னென்னமோ பொருள்கள் எல்லாம் விற்பனைக்குக் கொட்டிக் கிடந்தன. இந்தப் பையன் — இப்போது இளைஞன் — ஒரு முப்பட்டைக் கண்ணாடியை வாங்கினான். தன் அறைக்கு வந்தான். கதவுகளையெல்லாம் சாத்தினான். மூடிய ஜன்னலில் ஒரு துவாரம் செய்து அதன் வழியே சூரிய ஒளி உள்ளே விழும்படிச் செய்தான். அப்படிப் பாய்ந்த ஒளியின் வழியில் தான் வாங்கி வந்திருந்த முப்பட்டைக் கண்ணாடியை நீட்டினான். சூரிய ஒளி அதனுள் பாய்ந்து சுவரிலே வான வில்லின் வண்ணங்களை வாரி இறைத்துக் காட்டியது. வெண்மையான சூரிய ஒளியில் ஏழு வண்ணங்கள் இருக்கின்றன என்ற உண்மையை உலகுக்குக் கூறியது இந்த விஷமக்காரப் பையனான இளைஞன்தான். பிற்காலத்தில் உலகம் புகழும் விஞ்ஞானியான இவன் யார் தெரியுமா? தெரியவில்லையா?

இன்னுமொரு குறிப்புத் தருகிறேன். சொல்ல முடியுமா பாருங்கள். மரத்திலிருந்து ஓர் ஆப்பிள் பழம் கீழே விழுந்தால் அதை நீங்களும் நானும் சாதாரணமாகத் தானே பார்ப்போம். ஆனால் இவர் அதிலிருந்து ஒரு மகத்தான உண்மையைக் கண்டு உலகுக்குச் சொன்னார். சூரியனும் சந்திரனும், பூமியும் ஏன், எதனால் ஒன்றை ஒன்று சுற்றி வருகின்றன என்பதற்கான காரணத்தை விளக்கினார் — புவி ஈர்ப்பு என்ற தத்துவத்தைக் கூறிய இவர்?

ஆமாம், தலை சிறந்த மூன்று விஞ்ஞானிகளிலே ஒருவராகக் கருதப்படும் **ஐஸக் நியூடன்** என்பவர்தான் நோஞ்சானாகப் பிறந்து, குறும்புத்தனங்கள் செய்து பல புதுமைகளைக் கண்டவர். விஞ்ஞானி ஐஸக் நியூடனைப் பற்றி இன்னும் நீங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்கள் இல்லையா?

—**கிருஷ்ணவேணி**



தெரிஞ்சுக்கோ !

மாதங்களின் கதை

புது வருஷம் பிறந்திருக்கிறது. உங்களுக்கெல்லாம் புத்தாண்டு வாழ்த்துக்கள். புதிய ஆண்டு எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கவேண்டும். ஆங்கில மாதங்களின் பெயர்களெல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆனல் அந்தப் பெயர்கள் வந்ததற்கான காரணம் தெரியுமோ?

புத்தாண்டு என்ற மாளிகையின் முதல் வாசல் **ஜனவரி**. ஜேனஸ் என்ற ரோமானியக் கடவுளின் பெயரில் தோன்றியது ஜனவரி என்ற மாதம். இந்தக் கடவுளுக்கு இரண்டு தலைகள். கதவுகள் வாசல்களைக் காக்கும் கடவுள் ஜேனஸ். இவருடைய ஒரு தலை கடந்த காலத்தையும் இன்னொரு தலை வருங்காலத்தையும் நோக்குவதற்காக அமைந்துள்ளது.

ரோமானியர்கள் ஆண்டுக்கான நாட்களைக் கணிக்கும் முறையைக் கிரேக்கர்களிடமிருந்து கடன் வாங்கினர்கள். கிரேக்கர்கள் வருஷத்துக்கு முப்பது நாட்கள் என்றும், பத்து மாதங்கள் கொண்டது ஒரு வருஷம் என்றும் கணக் கிட்டார்கள். கிரேக்கர்களின் ஆரம்ப மாதம் மார்ச்.

கி. மு. 700ல் ரோமானிய மன்னரான நூமா பாம்பிலியஸ் என்பவரால் ஜனவரி பிப்ரவரி ஆகிய மாதங்கள் கிரேக்கக் காலண்டரோடு சேர்க்கப்பட்டதாகப் புராண வரலாறு. ஜனவரி பதினேராவது மாதம், பிப்ரவரி பனிரெண்டாவது மாதம். ஆச்சரியமாக இருக்கிறதில்லையா?

பழைய காலண்டரை விட இந்தப் பன்னிரண்டு மாதப் புதிய காலண்டர் கச்சிதமாக இருந்தாலும் பருவ காலங்களுக்கு ஏற்ப அது பொருத்தமாக இல்லை. ஜூலியஸ் சீஸர் பருவ காலங்களுக்கு ஏற்ப மாதங்களைத் துல்லியமாக மாற்றி அமைக்கும்படி ஆணையிட்டார். கி.மு. 46ல் அவர் கட்டளைப்படி மாதங்கள் திருத்தி அமைக்கப்பட்டன. அப்போது தான் ஜனவரி முதல் மாதமாகவும் பிப்ரவரி இரண்டாவது மாதமாகவும் மாறியது. சீஸரின் அந்த மாத அமைப்புக்கு **ஜூலியன் காலண்டர்** என்று பெயர். இது 1500 ஆண்டுகள் வரை புழக்கத்தில் இருந்தது.

பிப்ரவரி; பன்னிரண்டாவதாக இருந்த பிப்ரவரி மாதத்தை ஜூலியஸ் சீஸர் இரண்டாவது மாதமாக்கினர். சீஸரின் காலம்வரை பிப்ரவரி மாதத்துக்கு முப்பது நாட்கள்தான் கணக்கிடப்பட்டு வந்தது. சீஸர் பிப்ரவரி மாதத்திலிருந்து ஒரு நாளை எடுத்து ஜூலை மாதத்துக்குக் கொடுத்தார். ஜூலை மாதம் ஜூலியஸ் சீஸர் என்ற அவர் பெயரின் நினைவாக வழங்கப்படும் மாதமாயிற்றே. அதே மாதிரி அகஸ்டஸ் என்ற மன்னர் பிப்ரவரி மாதத்திலிருந்து இன்னொரு நாளை எடுத்து ஆகஸ்டுக்குக் கொடுத்தார். அவர் பெயரைக் கூறும் மாதமல்லவா அது? ஆகவே பிப்ரவரிக்கு இருபத்தெட்டு நாட்களாயிற்று. இருந்தாலும் ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை இதற்கு ஒரு நாள் கூடுதலாகக் கிடைக்கும். அந்த ஆண்டு லீப் வருஷம் எனப்படும். பருவ காலங்களுக்குச் சரியாக நாட்களைத் துல்லியமாகக் கணக்கிடவே இந்த ஏற்பாடு வருஷத்துக்கு $365\frac{1}{4}$ நாட்களல்லவா? நாலு கால் ஒன்று. அந்த ஒரு நாள் லீப் வருஷத்துக்குச் சேருகிறது.

மார்ச்: ரோமானியக் கடவுள் மார்ஸ். இவர் நினைவாகத் தோன்றியது மார்ச். மேலை நாடுகளில் பேய்க் காற்றும் இடீர் மழையும் தோன்றுவது மார்ச் மாதங்களில். யுத்தத்தின் அதி தேவதை மார்ஸ். கவசம் அணிந்து கேடயம் ஏந்தி அடர்ந்த தாடியுடன் காட்சியளிப்பார் இவர். யுத்தத்தைத் தவிரப் பயிர்த் தொழிலுக்கும் இவர்



தான் கடவுள். நிலத்தைப் பண்படுத்தியதும் விதை விதைக்கு முன் இவரிடம்தான் பிரார்த்தனை செய்வார்கள். ரோமானியர்களின் வாழ்வில் முக்கிய இடம் வகித்தவை யுத்தமும் பயிரிடுதலும்தான். ஆகவே மார்ச் முக்கியமான மாதமாகக் கருதப்பட்டது.

ஏப்ரல்: இந்த மாதத்துக்கு எப்படி இந்தப் பெயர் ஏற்பட்டது என்பதை நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. ரோமானியர்களின் காதல் தெய்வமான வீனஸின் நினைவாகத் தோன்றியது என்பர் சிலர். கிரேக்கக் கடவுளான அஃப்ரோடைட்டின் பெயரால் உண்டானதாகக் கூறுவார்கள் வேறு சிலர்.. 'அபரைர்' என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து பிறந்தது ஏப்ரல். அபரைர் என்றால் திறந்துவிடு என்று பொருள். ஆண்டின் செழிப்புக்கு வழி(திறந்து) வகுப்பது ஏப்ரல் மாதம்தான். காற்று மழைக்குப் பிறகு பருவநிலை அமைதியாகவும் ஆனந்தமாகவும் மாறுவதினால் இது பொருத்தமான பெயர் தான். மரங்களில் புதிய இலைகளும் பூக்களும் கனிகளும் தோன்றுவது இந்த மாதத்தில்தானே? நம்முடைய புதிய ஆண்டு பிறப்பதும் ஏப்ரலில்தானே?

மே மாதம்; மையா (Maia) என்ற பெண் கடவுளின் பெயரால் ஏற்பட்டது மே மாதம். இந்தக் கடவுள் அப்படியொன்றும் பிரபலமானவள் அல்ல. ஆனால் மையாவின் தகப்பனார் புகழ் பெற்றவர். உலகைத் தன் தோள்களிலே சுமப்பவரான ஆட்லஸின் மகள்தான் மையா. புகழ் பெற்ற ஹெர்மஸ் இவருடைய புதல்வன்.

ஜூன்: ஆங்கில மாதங்களின் பெயர்களெல்லாமே ரோமானியக் கடவுளர்களின் நினைவாக ஏற்பட்டவைதான்.. ஆனாலும் ஜூன் மாதத்துக்கு ஏற்பட்ட பெயரில் வாதப் பிரதி வாதங்கள் உண்டு. ஜூனியஸ் என்ற பழமையான ரோமானியக் குடும்பத்தின் நினைவாக வந்தது ஜூன் மாதம் என்றும், கடவுளர்களின் கடவுளான ஜுபிடரின் மனைவியும் தேவலோகத்தின் ராணியுமான ஜூனோவின் நினைவாகத் தோன்றிய மாதம் ஜூன் என்றும் கூறுவார்கள். பின்னால் கூறியதே பொருத்தமாகத் தோன்றுகிறது. ஜூனோ மயில்கள் பூட்டிய தேரில் பவனி வருவாளாம். பண்டைய ரோமில் ஜூனோ தேவதைக்கு ஜூன் மாதத் தொடக்கத்தில் விழா நடத்தினார்களாம்.

ஜூலை: புகழ் பெற்ற ரோமானிய மன்னரும் வீரருமான ஜூலியஸ் ஸீஸரின் பெயரால் வழங்கப்படும் மாதம் ஜூலை. ரோமானியக் காலண்டரை ஒழுங்கு படுத்தியவர் ஸீஸர் என்று முதலிலேயே கூறினோமில்லையா? ஏழாவது மாதத்துக்கு என்ன பெயர் வைப்பது என்பதில் குழப்பம் ஏற்பட்டது. பழைய அமைப்பில் ஜூலை ஐந்தாவது மாதமாக இருந்தது. அப்போது அதற்கு க்விண்டிலிஸ் (Quintilis) என்று பெயர். புதிய அமைப்பில் முதலில் இரு மாதங்கள் புதிதாகச் சேர்ந்ததும் ஐந்தாவது என்ற பொருளில் க்விண்டிலிஸ் ஏழாவது மாதமாக இருப்பது கேலிக்குரியதாகும் என்று கருதி ஏழாவது மாதத்தைத் தன் பெயரால் அழைக்கும்படி ஆணையிட்டார் ஸீஸர். ஜூலியஸ் ஜூலையாகியது.

ஆகஸ்ட்: ஆறாவது மாதம் என்பதைக் குறிக்கும் செக்ஸ்டிலிஸ் (Sextilis) என்பது ஸீஸரின் சீர்திருத்தத்துக்குப் பிறகு எட்டாவது மாதத்துக்குப் பொருத்தமாக இல்லை. ஆகவே ரோமானியர்கள் தங்கள் மன்னரான அகஸ்டஸைப் பெருமைப் படுத்துவதற்காக அவர் பெயரால் எட்டாவது மாதத்தை ஆகஸ்ட் ஆக்கினார்கள்.

செப்டம்பர்: செப்டம்பர் என்றால் ஏழு என்று பொருள். புதிய சீர்திருத்தத்தின்படி ஏழு ஒன்பதான போதும் ஏனோ ரோமானியர் இதை மாற்ற முன்வரவில்லை. செப்டம்பர் செப்டம்பராகவே நிலைத்து விட்டது.

அக்டோபர்: பழைய ஏற்பாட்டின்படி அக்டோபர் எட்டாவது மாதம். ஆனால் இன்றோ அது பத்தாவது மாதம். செப்டம்பரைப் போலவே இந்த மாதமும் பெயர் மாற்றம் பெறவில்லை. ஆங்கிலோ சாக்ஸானியர்கள் இந்த மாதத்தை மஞ்சள் மாதம் என்று அழைத்தார்கள்.

நவம்பர்: இன்றையப் பதினோராவது மாதமான இது முன்பு ஒன்பதாவது மாதமாக விளங்கியது. பெயர் மாற்றம் பெறாத மாதங்களில் இதுவும் ஒன்று.

டிசம்பர்: பழைய பெயரிலேயே தொடர்ந்து இருந்து வரும் மாதங்களில் இதுவும் இடம் பெறுகிறது. மேலை நாட்டவருக்கு டிசம்பர் என்றால் குதூகலம், கொண்டாட்டம், விருந்து, கேளிக்கை எல்லாம். கிறிஸ்துமஸ் மாதமாயிற்றே!

— கிட்டு





முட்டாள்கள்!

— ஷிகேயெம் —

ரொம்ப ரொம்ப வருஷங்களுக்கு முன்னாலே — நீங்களும் நானும் பிறப்பதற்கு முன்பு — ஒரு மனிதன் வாழ்ந்து வந்தான். அவன் பெயர் குப்பன். அவன் குப்பம்மா என்ற பெண்ணை மணந்து கொண்டான். குப்பம்மாவின் தாயாருடன் கிராமத்தில் சின்னக் குடிசை வீட்டில் குப்பன் வாழ்ந்து வந்தான். குப்பம்மா ஒரு வடிக்கட்டின முட்டாள். அவள் அம்மாவோ தன் பெண்ணைவிட வஸ்திரகாயம் செய்த முட்டாள்!

ஒரு நாள் குப்பன் வழக்கப்படி வயல் வேலைக்கு வெளியே போனான். குப்பம்மா தன் குழந்தை குப்பிக்கு உணவு கொடுத்து தொட்டிலில் விட்டிருந்தாள் தூங்குவதற்கு. குழந்தை குப்பியும் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தது தொட்டிலில். தொங்க விட்டிருக்கும் தொட்டிலல்ல அது. தரையி வைக்கும் தொட்டில். ஆட்டினால் ஆடு அந்தத் தொட்டிலை ஜன்னலுக்கு அருகே வைத்திருந்தாள் குப்பம்மா. திடீரென்று குப்பம்மா குய்யோ முறையோ என்று கூச்சலிட்டாள். ''ஐயோ நான் என்ன செய்வேன்? என் குழந்தை குப்பி... குப்பி!'' என்று கதறினாள்.

முருங்கைக் கீரை ஆய்ந்து கொண்டிருந்த குப்பம்மாவின் அம்மா, மகளின் அழுகையைக் கேட்டுக் கீரையை அப்படியே வீசிவிட்டு ஓடி வந்தாள். பீதியடைந்தவளாக. ''என்ன என்ன? என்ன நடந்தது?'' என்று தவிப்போடு கேட்டாள்.

''ஐயோ, அம்மா! அம்மா! நான் என்னம்மா செய்வேன்? என் குழந்தை குப்பி சாகப் போகிறாளே!'' என்று விம்மினாள் குப்பம்மா.

''சாகவா? ஏன், ஏனும், எதற்காகச் சாக வேண்டும்?''

''அதோ பார், ஜன்னலுக்கு மேல் உள்ள கட்டையில் கருப்பட்டிக் கட்டி இருக்கிறதில்லையா?''

''ஆமாம், அதற்கென்ன?''


''இதோ இந்தப் பூனை அங்கு தாவி ஏறினால் அந்தக் கருப்பட்டி குழந்தை குப்பி மீது விழுந்து கொன்றுவிடுமே!''

''ஆமாம்...'' என்று நீட்டி முழக்கிக் கையை வீசிக் கன்னத்தில் வைத்துக் கொண்ட அவள் அம்மா, ''ஐயோ நம் குப்பி சாகத்தான் போகிறாள். சந்தேகமே இல்லை'' என்றாள். அம்மாவும் பெண்ணும் அப்படியே அங்கேயே உட்கார்ந்தார்கள். கருப்பட்டியையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். குப்பம்மா ஒப்பாரி வைத்தாள். அவள் அம்மாவும் அதில் கலந்து கொண்டாள். இவர்கள் அழுகையைக் கேட்டு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாம் வந்து கூடிவிட்டார்கள். காரணம் இல்லாமல் இப்படிக் கதறி அழுவார்களா என்று யாரும் காரணம் கேட்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் குப்பன் வீடு திரும்பினான் நல்ல பசியோடும், களைப்போடும்.

''என்ன நடந்தது? ஏன் இப்படி அழுகிறீர்கள்?'' என்று கேட்டான் தன் இரு காதுகளையும் பொத்திக் கொண்டு. அவனால் அந்த அழுகையைச் சகிக்க முடியவில்லை. கண்ணீரை வழித்தெறிந்தபடி இருவரும் நடக்கப்போகும் விபரீதத்தைக் கூறி மறுபடியும் ஒப்பாரி வைக்கலானார்கள். குப்பனுக்கு எப்படி இருக்கும்?

''நான் என் வாழ்நாளில் எத்தனையோ மூடர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் உங்களைப் போன்ற அடி முட்டாள்களைப் பார்த்ததில்லை. உங்களை விடவும் மோசமான முட்டாள்கள் உலகிலே இருக்கிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ளக் கிளம்புகிறேன். அப்படி இருப்பார்களானால் இந்த வீட்டுக்குத் திரும்பி வருவேன். இல்லாவிட்டால் தேடிக் கொண்டே இருப்பேன் திரும்பி வரவே மாட்டேன்'' என்று கூறியபடி அப்படியே கிளம்பி விட்டான் குப்பன். அவனுக்குத் தன் மனைவியிடமும் மாமியாரிடமும் அப்படியொரு கோபம்.

பல நாள் எவ்விதக் குறிக்கோளுமின்றி எங்கெங்கோ அலைந்தான் குப்பன். அப்போது ஒருநாள் ஓர் அதிசயமான காட்சியைக் கண்டான். நல்ல வெயிலில் ஒரு மனிதன் ஒரு காலிக் கொப்பறையை ஏந்தியபடி நின்றான். பிறகு வேகமாகத் தன் குடிசைக்குள் போனான். மறுபடி வெளியில் வந்து கொப்பறையைச் சூரியனுக்கு நேராகப் பிடித்தான். உள்ளே ஓடினான். அவன் என்ன செய்கிறான் என்று புரியவில்லை குப்பனுக்கு. குழம்பிப் போன அவன் அந்த மனிதனிடம் போய், ''அப்பனே! நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டான்.



''ரொம்பக் காலமாக இந்தக் கேடு கெட்ட சூரிய வெளிச்சத்தைக்கொண்டு போய்க் குடிசைக்குள் கொட்டிக் கொண்டிருக்கிறேன். குடிசைக்குள் உள்ள இருட்டைப் போக்க வேறு வழி யில்லையே!'' என்றான் அந்த அறிவாளி!

''அடப் பாவி மனுஷா! இதென்ன காரியம்? உன்னிடம் அரிவாள் இருக் கிறதா?'' என்றான் குப்பன்.

''இருக்கிறதே!'' என்றான் சூரிய வெளிச்சத்தை அள்ளிக் கொட்டும் அறி வாளி. ''அதை எடுத்துக்கொள். குடிசை மீது ஏறு. கூரையின் நடுவே அரிவாளி னால் வெட்டி ஒரு திறப்பை ஏற்படுத்து. சூரியன் தன்னிச்சையாகவே உன் வீட்டினுள்ளே வந்து ஒளியைக் கொட்டு வான் பாரு!'' என்றான் குப்பன். அப் படியே செய்த அவன் மகிழ்ச்சி ஆரவாரத்தினால் குதித்தான்.

''அதிசயம், அற்புதம்! ஆஹா ஹா! ஆண்டவனே தான் உங்களை இங்கு அனுப்பி யிருக்க வேண்டும். இல்லா விட்டால் நான் என் ஆயுசு முழுதும் சூரிய வெளிச்சத்தை இந்தப் பாத் திரத்தில் நிரப்பி நிரப்பி உள்ளே கொண்டு போய்க் கொட்டிக் கொண் டிருந்து மாண்டு போயிருப்பேன்'' என் றான் அந்தப் புத்திசாலி.

''சரியான மடையன்!'' என்று தனக்குள் கூறிக்கொண்டே குப்பன் தன் வழி நடந்தான். மாலை மயங்கும் வேளையில் ஒரு கிராமத்துக்கு வந்தான். அங்கே ஒரு குடிசையின் வாசலைக் கோடாலி கொண்டு பிளந்து அகலப் படுத்தத் தயாராகிக் கொண்டிருந்தான் ஒருவன்.

''இதென்ன காரியமப்பா? இப்படி நீ இந்தக் குடிசை வாசலைத் தகர்த்தால் குடிசையே யல்லவா சரிந்து இடிந்து விழும்? எதற்காக இப்படிச் செய் கிறாய்?'' என்று கேட்டான் குப்பன்.


''ஐயா நான் ஒரு மரவேலை செய்யும் தொழிலாளி. வண்டிகள் செய்வது என் தொழில். அதோ பாருங்கள் பண்ணையாருக்கு ஒரு வில்வண்டி செய் தேன். அதை வெளியே கொண்டு வர வேண்டும். வாசல் சிறியதாக இருக் கிறது. கஷ்டப்பட்டுச் செய்த வண் டியை வெளியே கொண்டு வர முடிய வில்லை. அதனால்தான்'' என்றான் அந்த அபூர்வ அறிவாளி.

''அப்படியா? உள்ளே வா சொல் கிறேன்'' என்று அந்த வண்டித் தச்ச னை உள்ளே அழைத்துப் போனான் குப்பன். அந்த வண்டியின் பாகங் களைத் தனித் தனியே கழற்றச் சொன் னான். பாகம் பாகமாக அதை இரு வரும் வெளியே கொண்டு வந்தார்கள். பிறகு மறுபடி அதை இணைத்துப் பூட் டச் சொன்னான். தானும் அதற்கு உதவினான். வில் வண்டி ஜம்மென்று வெளியே பண்ணையார் வீட்டை நோக்கி ஓடத் தயாராக நின்றது.

''உங்களுக்கு ரொம்ப ரொம்ப நான் கடமைப் பட்டிருக்கிறேன் ஐயா! நீங்கள் மட்டும் வந்திரா விட்டால், நான் வீட்டை இடித்து நாசமாக்கியிருப் பேன்'' என்றான் வண்டிக் கலைஞன். ''வடிகட்டின மடையன்!'' என்று மனத் துக்குள் சொல்லிக் கொண்டே விடை பெற்றான் குப்பன் அவனிடம். ''சூரிய வெளிச்சத்தை வாரிக் கொட்டியவனைப் புத்திசாலியாக்கி விட்டானே இவன்!''

குப்பன் ஒரு குடியானவனின் பண் ணைக்கு வந்தான். அங்கு அவன் கண்ட





அட்டையில்.....

காற்றடைத்த பலூன் மேலே அறுந்து பறக்கத் துடிக்குது
கண்ணுக்கினிய காட்சி காண உயரச் செல்ல அழைக்குது
ஏற்றமிக்க புதிய ஆண்டில் எண்ணி இதைப் பாருங்கோ
எதிரில்வரும் தடை தவிர்த்து ஏற்றமுற வாருங்கோ.

வண்ணப்படம்: சந்தாமியான் —குழந்தையார்

காட்சி ''இதோ இன்னொரு அடி மட்டி!'' என்று முணு முணுக்க வைத்தது. வைக்கோல் கட்டைக் கொந்தித் தூக்கிப் போட ஒரு கம்பின் நுனியிலே சூலம்போன்ற ஓர் இரும்பு ஆயுதத்தைப் பொருத்தி இருப்பார்கள் இல்லையா? அதைக் கொண்டு வீட்டு முற்றத்தில் கொட்டி இருந்த நிலக்கடலையை வாரி வாரி அருகில் உள்ள சேமிப்புக் கூடத்தில் கொட்ட அரும்பாடு பட்டுக்கொண்டிருந்தான். அந்த வைக்கோல் வாரியினால் மல்லாக் கொட்டைகளை அள்ள முடியுமா?

''என்னப்பா செய்கிறாய்?'' என்றான் குப்பன்.

''இந்த நிலக்கடலைகளை அந்தக் குதிருக்குள் சேர்க்க வேண்டும். இந்தச் சனியன் பிடித்த வாறுகோல் பாழாய்ப் போக. உபயோகமே இல்லையே!'' உஸ் புஸ் என்று மூச்சு வாங்க அதனால் கடலைகளை அள்ள முயன்றான் குடியானவக் கொழுந்து.

''ஏன் வீணாக இப்படிப் பாடுபடுகிறாய்? வைக்கோல் வாரியை நீ எத்தனை நிந்தித்தாலும் அதற்கு நஷ்டம் ஏதுமில்லை. உன்னிடம் கூடை இருக்கிறதில்லையா?'' என்று கேட்டான் குப்பன்.

''கூடை இல்லாம்லா? இருக்கிறது.''

''அதில் இந்த வேர்க் கடலைகளை வாரிக் கொண்டு போய்க் குதிருக்குள் கொட்டு. இது வைக்கோலை வாரிப் போடத்தானே தவிர மல்லாக்கொட்டையை அள்ளுவதற்கு ஏற்றதல்ல'' என்றான்.

குப்பன் சொன்னபடியே கூடையின் உதவியினால் கடலைகளைக் குதிருக்குள் சேர்ப்பித்த குடியானவன் குப்பனின் அறிவுத் திறமையை வானளாவப் புகழ்ந்தான்.

''மட்டி, மடையன்'' என்றபடி மேலே நடந்தான் குப்பன். வெகு தூரம் பிரயாணம் செய்த அவனை ஒரு விநோதமான காட்சி வரவேற்றது. குப்பனால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. ஒரு மனிதன் ஒரு பசுமாட்டின் கழுத்தில் கயிற்றைக் கட்டி, தான் ஒரு பரண் மீது நின்றுகொண்டு அதை அதன் மேலே மூச்சுக்கட்டி இழுத்துக் கொண்டிருந்தான். பாவம் பசுமாடு! அது மூச்சுத் திணறித் திக்குமுக்காடித் தவித்தது. குப்பனுக்கு இந்தக் காட்சி அடங்காச் சிரிப்பை மூட்டியது. ''நீ என்னப்பா செய்கிறாய்?'' என்று கேட்டான் அவனை.

''அதான் பார்க்கிறாயே, தெரியவில்லை?''

''பார்க்கிறேன்தான். ஆனால் காரணம் புரியவில்லையே!''

''இந்தப் பாழாய்ப் போன பசுமாடு பசியால் தவிக்கிறது. ஆனால் நான் சொல்கிறபடி கேட்டால்தானே? 'இதோ இந்தப் பரணிலே வைக்கோல் இருக்கிறது. இங்கு வா. வந்து இதை தின்று தொலை' என்று கட்டி இழுக்கிறேன். மூளை கெட்ட முண்டம், முரண்டு பிடிக்கிறது வராமல். போகட்டும். பசியால் சாகட்டும்!''

''அப்பனே! அப்படியெல்லாம் சலித்துக்கொள்ளாதே. இந்தப் பசுவை இப்படி இழுத்தாயானால் அது செத்துப் போகும். பரண்மீதுள்ள வைக்கோலைக் கீழே கொண்டு வந்து அதன் அருகில் போடு.''

''வைக்கோல் இறைந்து வீணாகுமே!''

''குருணிச் சோம்பல் கோடி நஷ்டம். வைக்கோலை எடுத்துப் போகும்போது கொஞ்சம் இப்படி அப்படி இறைந்தால் என்ன? பொறுக்கிக்கொள்ளலாம். மாட்டைத் தூக்குப் போட்டுச் சாகடிக்காதே!'' என்றான் குப்பன். அந்த மடையனும் பரணிலிருந்து வைக்கோலை அள்ளிக் கீழே போட்டான். பசுமாடும் பரம சந்தோஷத்துடன் ஆவலோடு வைக்கோலைத் தின்று பிழைத்தது.

குப்பன் ரஸ்தாவின் மைல் கல்லில் உட்கார்ந்து கொண்டு யோசித்தான். 'என் பிரயாணத்தில் நான் எத்தனை விதமான முட்டாள்களைப் பார்த்துவிட்டேன். இவர்களையெல்லாம் விட என் மனைவியும் மாமியாரும் எவ்வளவோ தேவலாம் போலிருக்கிறதே. ஆகவே இனிமேலும் முட்டாள்களையும் மட்டிகளையும் மடையன்களையும் சந்திக்க வேண்டாம். நம் புத்திசாலி மனைவியுடனேயே காலம் தள்ளலாம்' என்று வீடு திரும்பினான் குப்பன்.

ஷேக் சில்லி

எஸ். பவானி

ஒரு கிராமத்தில் ஒரு தனவந்தர் வசித்து வந்தார். அவர் மிகவும் கெட்டிக்காரர். அவரிடத்தில் எந்த வேலைக்காரனும் அந்த நாள்வரை தங்கியதில்லை. அவர் தன்னுடைய ஒப்பந்தப்படி அவனுடைய மூக்கை வெட்டி வெளியேற்றி வந்தார்.

ஒரு நாள் ஷேக் சில்லிக்கு இந்த விவரம் தெரிய வந்தது. அவன் தனவந்தரிடம் வேலை பார்க்கும் முடிவுடன் வந்தான். தனவந்தர் அவனிடம் ''எந்த வேலைக்காரன் தானே விலகிக் கொள்கிறானோ, அவனுடைய மூக்கை நான் வெட்டி அனுப்புவேன் என்று ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும், சம்மதமா?'' என்று கேட்டார்.

அதற்கு ஷேக், ''ஐயா! எனக்கும் ஓர் ஒப்பந்தம் நீங்கள் செய்து தர வேண்டும். அதாவது வேலையை விட்டு நீங்களே என்னை வெளியேற்றினால் நான் தங்கள் மூக்கை வெட்டிவிடுவேன்'' என்றான்.


தனவந்தர் ஒப்புக் கொண்டார். சாப்பாட்டு நேரம் வந்தது. தனவந்தரின் மனைவி ஷேக்கைக் கூப்பிட்டு, ''ஷேக், இந்த வீட்டின் விதி என்னவென்றால், வேலைக்காரர்களுக்கு ஓர் இலையில்தான் சாப்பாடு போடப்படும். எனவே நீ சென்று ஓர் இலை கொண்டு வா'' என்று சொன்னாள். ஷேக் ஒரு பெரிய வாழை இலையை எடுத்து வந்தான். தனவந்தர் அவர் மனைவி ஆகிய இருவரின் சாப்பாட்டையும் அவ்வளவு பெரிய இலையில் போட்டும் அதில் இடமிருந்தது. ஷேக் அவ்வளவையும் சாப்பிட்டு விட்டான்!

தனவந்தரிடத்தில் ஓர் அழகான குதிரை இருந்தது. அதைத் தனவந்தர் மிகவும் விரும்பி வந்தார். ஒரு நாள் தனவந்தர் வெளியூர் சென்றிருக்கும் பொழுது அந்தக் குதிரையை ஷேக் விற்பதற்காக ஓட்டிச் சென்றான். வாங்க வருபவர்களிடம் அவன், ''ஐயா! நான் குதிரையை விற்பேன். ஆனால் வாலை மட்டும் வெட்டி எடுத்துக் கொண்டு விடுவேன்'' என்று சொன்னான். ஒரு வண்டிக்காரன் இதற்குச் சம்மதித்து வாங்கிச் சென்றான்.

குதிரையின் வாலை எடுத்துக்கொண்டு ஷேக் அந்தக் கிராமத்திலிருந்த ஒரு குளத்துக்குச் சென்றான். வாலின் ஒரு பாகம் தண்ணீருக்கு வெளியே நீட்டிக் கொண்டிருப்பதைப் போல் அதைப் புதைத்து வைத்தான்.

தனவந்தர் மறு நாள் வெளியூரிலிருந்து வந்ததும் குதிரையைப் பற்றிக் கேட்டார். அதற்கு ஷேக் ''எனக்கு என்ன தெரியும்? போய் விசாரித்து வருகிறேன்'' என்று கூறி வெளியே சென்றான். சிறிது நேரத்தில் ''குதிரை மூழ்கி விட்டது! குதிரை மூழ்கி விட்டது!'' என்று கூவிக் கொண்டே ஓடி வந்தான்.

தனவந்தரும் குதிரையைக் காப்பாற்றும் நோக்கத்தில் ஓடிச் சென்று குளத்தில் குதித்தார். வெளியில்





உன் கண் உன்னை ஏமாற்றினால்.....?

மேலே மூன்று வரிசைப் படங்கள் இருக்கின்றன. ஒன்றேபோல இருந்தாலும் ஒவ்வொரு வரிசையிலும் ஒரு படம் மட்டும் ஏதோ ஒரு விதத்தில் மாறுபட்டு இருக்கிறது. ஒவ்வொரு வரிசையிலும் மாறுபட்ட படம் எது என்று சொல்ல முடியுமா?

விடை: A-1, B-3, C-1.

தெரிந்த குதிரையின் வாலை அவர் இழுத்ததுமே வால் அவர் கையோடு வந்து விட்டது. ஷேக் அதைக் கண்டு ஆரவாரித்தான். "டேய், துக்கிரிப் பயலே! கேலியா செய்கிறாய்?" என்று இரைந்தார்.

அதற்கு ஷேக், "இருநூறு ரூபாய் கொடுத்தால்தான் சும்மா இருப்பேன்" என்றான். தனவந்தரும் இருநூறு ரூபாய் கொடுக்க நேர்ந்தது.

ஒரு தடவை ஒரு நண்பருக்குக் கொடுக்க வேண்டிய ஒரு 'பரிசுப் பையை வீட்டில் மறந்து வைத்துவிட்டுத் தனவந்தர் சென்றார். பாதி தூரம் சென்றதும் அவருக்கு நினைவு வந்தது. "அந்தப் பையைக் கொண்டு வரச் சொல்லி ஷேக்கிடம் சொல்லுங்கள்" என்று வழியில் வந்த ஒரு மனிதரிடம் சொல்லி அனுப்பினார். ஷேக்கும் கொண்டு வந்து கொடுத்தான். தனவந்தர் நண்பர் வீட்டுக்குப் போய் அதைப் பிரித்துப் பார்க்கும்போது அதில் வார் அறுந்த செருப்புக்கள் இருந்தன.

இவ்வாறு ஷேக், தனவந்தர் தன்னை விரட்ட முடியாதபடி, தானும் அவர் இட்ட பணியைச் சரியாகச் செய்யாமல் தொல்லை கொடுத்து வந்தான். அவன் குறும்புகள் பொறுக்க முடியாமல் தனவந்தரும் அவர் மனைவியும் அவ்வூரை விட்டே ஓடிப் போக முடிவு செய்தனர்.

ஒரு நாள் இரவு எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டு இருவரும் தூங்கி விட்டார்கள். சந்தர்ப்பம் பார்த்து ஷேக் ஒரு பெரிய பெட்டியில் புகுந்து படுத்துக் கொண்டான். மறு நாள் காலை தனவந்தரின் மனைவி தண்ணீர் எடுக்கக் கிணற்றடிக்குச் செல்லும் போது ஷேக் மெல்லப் பெட்டியை விட்டு வெளியே வந்து தண்ணீர் இழுத்துக்கொண்டிருக்கும் தனவந்தரின் மனைவியைக் கிணற்றினுள் தள்ளி விட்டு விட்டு, "காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்! தனவந்தர் தம் மனைவியைக் கிணற்றில் தள்ளிவிட்டார்!" என்று கூவினான். பிறகு தனவந்தர் அவனுக்கு ஐந்நூறு ரூபாய் கொடுத்த பிறகுதான் மௌனமானான்.


ஒரு தடவை தனவந்தருடன் ஷேக், அவருடைய மாமியார் வீட்டுக்குச் செல்ல நேர்ந்தது. அவ்வீட்டை அடைந்ததுமே, ஷேக், "ஐயா தற்சமயம் மிகவும் முடியாமல் இருக்கிறார். வைத்தியர்கள் அவரை மௌனமாயிருக்கும்படியும் ஓர் ஆழாக்கு உப்பில் இரு ஆழாக்கு மிளகாயை இடித்துக் கலந்து அதை மட்டும் சாப்பிடச் சொல்லியிருக்கிறார். இதைத் தவிர வேறு ஒன்றும் அவர் சாப்பிடக்கூடாது. ஆனால் அவர் வைத்தியர் கூறியதைக் கடைப்பிடிக்காமல் குழந்தை போல எதையும் சாப்பிடுவேன் என்று அடம் பிடிக்கிறார். அவர் உடல் நலமாக இருக்க வேண்டுமானால் அவர் விருப்பப்படி ஆகாரம் கொடுக்காதீர்கள்" என்று உரக்கக் கத்தினான்.

தனவந்தர் தம் மனத்திற்குள்ளேயே ஷேக்கை நன்கு திட்டினார். பிறகு அவ்வீட்டில் எல்லாரும் தூங்கியபிறகு திருடனைப் போல் மறைந்து சமையலறையில் புகுந்து பாயசம் முதலியவற்றைக் குடிக்க ஆரம்பித்தார். சத்தம் கேட்டு அவருடைய மாமியார் "திருடன், திருடன்!" என்று கத்தினாள். அதன் விளைவு தனவந்தர் நன்கு உதை வாங்க நேர்ந்தது.

மறு நாள் தனவந்தர் ஷேக்கைக் கூப்பிட்டு, "அப்பா! உன் தொல்லை எல்லை மீறிப் போய் விட்டது. என் மூக்கை வெட்டி எடுத்துக் கொண்டு, உன் வழியே போய்த் தொலை" என்று சொன்னார்.

ஷேக்கும் அவ்வாறே செய்தான்!

திவான் பூர்ணய்யா



பொன்மலை பரிமளம்

மைசூர் மாநிலத்தை ஹைதர் அலி ஆண்டு வந்த காலத்தில் அவருக்குத் திவானாகப் பணி புரிந்தார் பூர்ணய்யா. ஹைதர் அலியின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான பூர்ணய்யா ஹைதர் அலியின் வலக் கரம் போன்றவர். அந்த உண்மை ஊழியருக்குத் தங்கக் குடை பிடித்துக் கொண்டு போகும் கௌரவத்தை அளித்திருந்தார் ஹைதர் அலி.

ஹைதர் அலிக்கு முன்பு மைசூரை ஆண்டு வந்த இந்து மன்னருக்குச் சர்வாதிகாரியாக இருந்த கரச்சூரி நஞ்சராஜய்யா என்பவரிடம் கணக்கராகப் பணி புரிந்தவர் பூர்ணய்யா.

ஒரு சமயம், சத்தியமங்கலம் கோட்டைக்கு அதிகாரியாக இருந்த கெம்பையா என்பவன் பெரும் புதையலைக் கண்டெடுத்தான். தான் கண்டெடுத்த புதையல் அரசாங்கத்துக்குச் சொந்தம் என்பதை உணர்ந்தவன் அதை ஹைதர் அலியிடம் கொடுத்துப் பாராட்டுப் பெற்றான். கெம்பையாவின் நேர்மையான குணத்தைப் பாராட்டிய ஹைதர் அலி அவனைச் சத்தியமங்கலம் கோட்டைக்குக் கில்லேதாரராகப் பதவி உயர்வு கொடுத்து நியமித்தார்.

வழக்கம் போல் சத்தியமங்கலம் கோட்டையின் வரவு செலவுகளைப் பரிசோதனை செய்ய வந்த ஹைதர் அலி, 'கணக்கு வழக்குகளில் இருநூறு பகோடாக்களுக்குச் சரியான கணக்கு இல்லை' என்ற காரணத்துக்காகக் கெம்பையாவைக் கைது செய்யும்படி உத்தர விட்டார்.

ஹைதர் அலி கெம்பையாவுக்கு வழங்கிய தண்டனை முறையற்றது என்பதை அறிந்த திவான் பூரணய்யா, தக்கத் தருணத்தில் இது பற்றி ஹைதரிடம் சொல்லாமல் சொல்லலாம் என்று நினைத்தார்.


ஒருநாள் மாலை, ஹைதர் அலியும் பூர்ணய்யாவும் ஆற்றங்கரையோரமாக உலாவிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஆற்றில் ஒரு பெரிய மரக் கட்டை மிதந்து கொண்டு சென்றது.

ஆற்றில் மரக் கட்டை மிதப்பதைக் கண்ட ஹைதர் அலி, ''பூர்ணய்யா, இந்தப் பெரிய மரக் கட்டை மிதக்கும் இந்த ஆற்றில் மரக்கட்டையைவிட பல மடங்கு எடை குறைவாயுள்ள சிறு கல்லைத் தூக்கிப் போட்டால் ஆழத்தில் அமிழ்ந்து விடுகிறதே, ஏன்?'' என்று கேட்டார்.

அதற்குப் பூர்ணய்யா, ''சர்க்கார், மரம் வளர்வதற்கு முக்கியக் காரணம் தண்ணீர். தானே தண்ணீர் கொடுத்து வளர்த்த குழந்தையை ஆறு ஆழத்தில் அமிழ்த்திவிடாமல் ஆதரித்து மிதக்க விடுகிறது'' என்று கூறினார். 'எப்பொழுதும் நேர்மையாக நடந்து கொள்ளும் கெம்பையாவைச் சரியாவ கணக்குவைத்துக் கொள்ளாத காரணத்தால் சிறையில் அடைக்கும்படி உத்தரவிட்டதைத் தான் பூர்ணய்யா சாமார்த்தியமாகக் கூறுகிறார்' என்பதைப் புரிந்து கொண்ட ஹைதர் அலி, கெம்பையாவை மன்னித்து விடுதலை செய்யச் சொன்னதோடன்றி திவான் பூர்ணய்யா சாமர்த்தியமாகச் சொன்ன திறமையை வியந்து அவருக்கு 'மிர்மீரா' என்ற சிறப்புப் பட்டத்தையும் கொடுத்தார்.



சித்திரம்: செல்லம்


அன்று மழை. மங்குவும் சங்குவும் கூடாரத்திலுள் முடங்கிக் கிடந்தனர். மங்குவுக்குத் தன்னைக் காப்பாற்றியவனைப்பற்றிய நினைவு.
இந்தா, உன் பூட்ஸும், இந்தக் கோட்டும். உன் குளிருக்குக் கதகதப்பா இருக்கும்.
மனிதர்களை விட நீ எவ்வளவோ விசுவாசமாக இருக்கிறாய் நண்பா... இதன் வழியாக உள்ளே போய்க் கதவைத் திற. மழைக்கு வசதியாக இந்த வீட்டினுள் தங்கலாம்.
அதோ....பாரு! அந்த ஆளு என்னைத் தேடிக்கிட்டுத்தான் வரான் போலே.
என்ன அங்கே? ஐயோ, போலீஸ்....
வரட்டும் அந்த ஆளு. கழுநீர் அபிஷேகம் நடக்கும்.... நீ பயப்படாதே. வாளி அவன் தலையை மூடிக்கும். நாம் தப்பி ஓடிடலாம்.
பலே, பலே! நண்பா உன் வேலையே வேலை.
ஹய்யா! எப்படி ஐயாவோட பிளான்? கதவைத் திறந்ததும் கழுநீர் அபிஷேகம் வரு... வரு... வரா!
வாளியிலிருந்து அவன் தன் தலையை விடுவித்துக் கொள்ளுவதற்குள் நாம்...
...போயே போய் விடலாம், வெகுதூரம், ஓடியா....


அன்று அந்தப் பாழ் வீட்டின் ஜன்னல் வழியே தப்பி ஓடும் போது முழங்காலில் பலமான அடி. காயம் ரொம்பத் தொல்லை கொடுக்குது. வேகமா ஓட முடியல்லே.
நீ பேசாம ரெஸ்ட் எடுத்துக்கோ. உன் மேலே இந்த காய்ந்த சருகுகளைப் போட்டு மூடி வைக்கிறேன்.
தன் நண்பனைச் சருகுகளால் மூடிவிட்டு ஒரு மரப்பொந்தில் ஒளிந்திருக்கிறது மங்கு. அப்போது வருகிறார் கான்ஸ்டபிள்.
இப்படித்தானே ஓடி வந்தான் அந்தப் பய. ஆளை எங்கேயும் காணோமே. எப்படி மாயமா மறைந்தான்? ம்...
தீக்குச்சி, சருகுகளில் நெருப்பு மூட்டி விட அதனடியிலிருந்த கைதி கதறியபடி வெளியேறி ஆற்றை நோக்கி ஓடுகிறான்.
ஏய்... நில்லு... நில்லு...
ஆற்றிலே குதித்து நெருப்பை அணைத்துக் கொண்ட கைதி துரத்தி வரும் போலீஸை எதிர் பார்த்து ஒளிந்திருக்கிறான்.
வரட்டும் வரட்டும் அந்தப் போலீஸ். இந்தக் கொள்ளி எறும்புப் புற்றை இலைச் சருகுகளால் மூடி வைக்கிறேன். ஐயா இதைப் பார்த்துட்டு...
இப்படிச் சருகுக்குள்ளே மறைஞ்சிருந்தா நான் ஏமாந்து போவேன்னு எண்ணினையா? இந்தத் தடவை நீ தப்பவே முடியாது. உன்னே இப்படியே மிதிமிதின்னு மிதித்து...
ஐயோ! கட்டெறும்பு, கள்ள எறும்பு, கொள்ளி எறும்பு. முதுகிலே கழுத்திலே கையிலே..! என்னமாக் கடிக்குது..! ஐயோ யப்பாடி... அம்மாடி!
தொடரும்


கோகுலத்தில்....


கோகுலத்தில் கோபியர்கள் தயிர்கடைந்திட-வானில்
கோடிகோடி மோர்த்துளிகள் மீன்களானதோ?
கோள்சொல்லும் கோபிமீது கோபம்கொண்டுமே
—கண்ணன்
வீசிவிட்ட வெண்ணெய்வெள்ளி நிலவுமானதோ?

செவ்விதழ்கள் சிந்துகின்ற சிறுநகையெல்லாம்—சீராய்
சேர்ந்திதழாய் மலர்களாக மாறிநின்றதோ?
செவ்வாயிற் கடையோரம் வழிந்தநீரெலாம்-நேராய்
சிந்துகின்ற தேனுக மலரிற் சென்றதோ?

கொஞ்சிக் கொஞ்சிக் கோபாலன் பேசியதெல்லாம்
—நெஞ்சை
கொள்ளைகொள்ளும் கானமென்ற கலையுமானதோ?
ஆடிஓடி அசைந்தவனும் ஆடியதெல்லாம் — ஆகா
ஆடற்கலை அழகினுக்கோர் வடிவமானதோ?.

— ஆர். பி. சாரதி





பூனை விரதம்!

எலி எதிரே வந்துமேன்
ஏங்கி ஏங்கிப் பார்க்கிறீர்?
சாவி கொடுத்த பூனையால்
தாவிப் பிடிக்க முடியுமோ?

—ஆர். பி. சாரதி

வீர சிப்பாய்!

நாடு காக்க என்றுமே
நாடி ஓடி நிற்பவன்
கேடு காக்க எல்லையின்
கோடியிலே நிற்பவன்.

பகைவர்களின் பார்வையில்
பட்டுவிடா வண்ணமே
பதுங்கிப் பதுங்கிச் செல்பவன்
பகையழித்து வெல்பவன்.

இரவு நேரத் துயில்தனை
இல்லை என்று ஆக்கியே
இருள் மங்கும் ஒளியுள்
இருக்கும் [illegible]

சீறும் குண்டு மழைகளை
சிதறும் வாணப் பொறிகளை
சிறிதும் கண்டு அஞ்சிடான்
செயலில் தீர மிக்கவன்.

உண்ண உணவு மின்றியே
ஒதுங்க இடமு மின்றியே
சின்னச் சின்ன 'டிரெஞ்'சிலே
சிறிது நேரம் உறங்குவான்.


பாரதத்தின் சுதந்திரம்
பத்திரமாய்க் காக்கவே
பாடுபடும் இயல்பினன்
பகைவர்கட்கு எமனவன்.

வீர சிப்பாய் என்றதும்
[illegible]
தீர மிக்க பாரதம்
[illegible]

சின்னச் சின்னப் பூனைக்குட்டி
சின்னக் கண்ணன் பூனைக்குட்டி
கன்னங் கரிய பூனைக்குட்டி,
கண்ணுக்கினிய பூனைக்குட்டி!

கண்ணை மூடிப் பார்ப்பதால்
காலை மாலை ஆகுமோ?
காலை மட்டும் ஆட்டினால்
காத தூரம் போகுமோ?

பாலுஞ் சோறும் வைத்துமேன்
பார்த்து சும்மா நிற்கிறீர்?
விலை உயர்வுக் கஞ்சியோ
விரதமிருக்கப் போகிறீர்?



யானை, குதிரை ஏறலாம்!

ஆனைமீது ஏறுவேன்
ஆனந்தமாய்ச் சுற்றுவேன்;
பூனைபோல நின்றிடும்
புலிமுதுகைப் பற்றுவேன்!

குதிரைமீது ஏறுவேன்,
குதூகலமாய் ஓட்டுவேன்;
புதிருனக்குப் புரியுதா,
புரியும்படி சொல்லவா?

நாற்காலி கூடவா
நாலு காலில் பாய்ந்திடும்?
நிற்காமல் தொட்டிலும்
நிமிடத்தில் செல்லுமோ?

சுற்றிடும் ராட்டினத்தில்
சும்மாபோக முடியுமா?
துட்டிருந்தால் ஏறலாம்,
தூரநின்றும் பாக்கலாம்!



—ஆர். பி. சாரதி

தன் உடம்பு என்பதோ
தன் குடும்பம் என்பதோ
தன் உணர்வு என்பதோ
தான் கொளாத வீரனும்.

கையைக் காலை இழந்திட்டால்
கருத்தி விருத்திப் போற்றுவோம்
மெய்யைத் துறந்த வீரனுக்கு
வீர வணக்கம் செய்குவோம்.

அவர் குடும்பம் வாழவே
அள்ளி அள்ளி வழங்குவோம்
அவர் பெருமை மிக்கவே
அன்புடனே வாழ்த்துவோம்.

— கோமகன்



யாரையும் 'ஆடு' என்று திட்டாதீர்கள்!

அ. ராம்கோபால்

பருத்திப் பஞ்சிலிருந்து நூல் நூற்று ஆடை நெய்வது போல சிலவகை மிருகங்களின் உடலை மூடி இருக்கும் ரோமத்தை வெட்டிச் சுத்தம் செய்து நூலாகத் திரித்து இந்த நூலிலிருந்து தயாரிக்கப்படுவதுதான் கம்பள ஆடை.

தலை மயிர்

முதன் முதலாக மனிதனின் தலை மயிரைச் சேகரித்து அதை நூலாக்கி ஆடை நெய்தார்கள். கிழக்கத்திய நாடுகளில் உள்ள புத்தர் ஆலயங்களில் பக்தர்கள் செலுத்தும் முடி காணிக்கைகளை ஒன்று சேர்த்து அவைகளைச் சுத்தப்படுத்தி நூலாக்கிக் கோவில்களுக்குத் தேவையான திரைகள், படுதாக்கள் நெய்கின்றனர். இப்போது வெள்ளாடு, செம்மறியாடு, குதிரை, ஒட்டகம், முயல் ஆகியவற்றின் மயிர்களும் ஆடை தயாரிக்கப் பயன்படுகின்றன.

மொஹேர்

துருக்கியின் தலைநகர் பெயர் அங்காரா (Ankara). இதை அவர்கள் நாட்டில் அங்கோரா (Angora) எனவும் கூறுவார்கள். இந்த அங்கோராவிலும் துருக்கியின் மற்ற பகுதிகளிலும் ஒருவகை வெள்ளாடு வளர்க்கப்படுகின்றது. இதன் உடலில் ரோமம் அடர்ந்து நீண்டு வளர்ந்திருக்கும். இந்த ரோமத்தை மொஹேர் (Mohair) எனச் சொல்வார்கள். இதிலிருந்து தயாரிக்கப்படுவதே உலகப் புகழ் பெற்ற துருக்கிக் கம்பளங்கள். இப்போது இந்தத் துருக்கி வெள்ளாடுகளை தென் ஆப்பிரிக்காவிலும் ஏராளமாக வளர்க்கிறார்கள். அங்கும் மொஹேர் கிடைக்கிறது. கம்பளங்களும் தயாரிக்கிறார்கள்.

காஷ்மீர்

நம் நாட்டில் காஷ்மீர் மக்களின் பிரதான தொழில் ஆடு வளர்ப்புத்தான். செம்மறியாடு, வெள்





ளாடு இரண்டையும் அங்கு அதிகமாக வளர்க்கிறார்கள். குளிர் காலம் முடிந்ததும் குளிருக்குப் பாதுகாப்பாகச் செம்மறியாடுகளின் உடலில் நீண்டு வளர்ந்திருக்கும் மயிரைக் கத்தரித்துச் சேகரிப்பார்கள். ஆனால் வெள்ளாடுகளின் ரோமத்தை இப்படிக் கத்தரித்துச் சேகரிப்பதில்லை. அவை மேயும் இடங்களில் கத்தை கத்தையாகக் கோடையில் மயிர்கள் உதிர்ந்து விடும். மேயும்போதும் செடிகளில் புதர்களில் மயிர்க் கத்தைகள் சிக்கிக் கொண்டுவிடும். இவற்றை யெல்லாம் கூடச் சேகரிப்பார்கள். சிலர் மயிரை வெட்டாது கையாலேயே நீண்ட மயிர்களை மட்டும் பிடுங்கிச் சேகரிப்பதும் உண்டு. காஷ்மீர் கம்பளங்கள் இந்தமயிர்களையும் செம்மறியாட்டு ரோமங்களையும் கொண்டுதான் தயாரிக்கப்படுகின்றன. கம்பள நெசவு அங்கு குடிசைத் தொழிலாக நடைபெறுகிறது.

ஒட்டகம்

அரபு நாடுகளிலும் சீனாவிலும் இந்தியாவின் மேற்குப் பகுதியிலும் ஒட்டக மயிர்களைச் சேகரித்து அதை நூலாகத் திரித்துத் துணிமணிகள் நெய்கிறார்கள். இரண்டாவது உலகப் போருக்கு முன்பு உலகில் பல நாடுகளுக்கு ஒட்டக மயிர் ஏற்றுமதி செய்து வந்தது சீனா. ஆண்கள் அணிந்துகொள்ளும் ஒருவகை மேல் கோட்டுகள் (over coats) தயாரிக்கவும் ஒட்டக முடி முக்கியமாகப் பயன்படுகிறது.

குதிரை

குதிரை மயிரையும் சேகரித்து நூல் நூற்றுத் துணிகள் நெய்கிறார்கள். இந்த மயிர்கள் முரடானவை. பொதுவாகக் குதிரைகளின் வால், பிடரி மயிர்களையே இவ்விதம் பயன்படுத்துகிறார்கள். அமெரிக்கா உள்ளிட்ட குளிர் மிகுந்த பல மேல் நாடுகளில் மெத்தைகள், திண்டு, தலையணைகள் தயாரிப்பதற்கான துணிகள் இந்த ரோமத்திலிருந்து தயாரிக்கப்படுகின்றன. இவ்விதம் தயாரிக்கப்படும் மெத்தை, திண்டு, தலையணை போன்றவை அதிக காலம் நீடித்து உழைக்கின்றன. குளிர் நாடுகளில், ரயில்வே ஆசனங்களின் உள்ளே திணித்து அடைப்பதற்கும் குதிரை மயிர் வெகுவாகப் பயன்படுகிறது.

முயல்

முயல் மயிரையும் நூலாக நூற்றுத் துணிகளாக நெய்கிறார்கள். ஆஸ்திரேலியாவிலிருந்து உலகில் பல நாடுகளுக்கு முயல் ரோமம் ஏற்றுமதியாகிறது. மலிவான கம்பளத் துணி தயாரிக்க இந்த முயல் ரோமம் பயன்படுகிறது. விலை உயர்ந்த மயிர்களோடு கலப்படம் செய்யவும் இதைப் பலர் பயன்படுத்துகிறார்கள். ஆஸ்திரேலியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் முயல் ரோமம் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

செம்மறியாடு

செம்மறி ஆட்டு உரோமத்தை ஆங்கிலத்தில் ''உல்'' (Wool) எனக் கூறுவார்கள்.

செம்மறி ஆட்டு உரோமத்தை மெரினோ (Merino) கிராஸ் பிரெட் (Cross Bred) கார்பெட் (Carpet) என மூன்று வகையாகப் பிரித்திருக்கிறார்கள். உலகில் வருடத்தில் சுமார் 400 கோடி



ராத்தல் செம்மறி ஆட்டு உரோமம் கிடைக்கிறது. இதில் 35 சதவிகிதம் மெரினோ, 45 சதவிகிதம் கிராஸ் பிரெட், 20 சத விகிதம் கார்பெட் வகையைச் சேர்ந்தது. உலகிலேயே மிக அதிகமான கிராஸ் பிரெட் உரோமம் நியூஜிலாந்திலிருந்து கிடைக்கிறது. மெரினோ, கிராஸ் பிரெட் ஆகி இரண்டு வகை உரோமங்களும் பெரும்பாலும் துணிகள் நெய்யப் பயன்படுகின்றன. 'கார்பெட்' வகை பெயருக்கேற்பக் கம்பள ஜமக்காளங்கள் தயாரிக்கவே அதிகமாகப் பயன்படுகிறது. இந்த வகை உரோமம் ரஷ்யா, இந்தியா, பாகிஸ்தானில் வளர்க்கப்படும் ஆடுகளிலிருந்து அதிகமாகக் கிடைக்கிறது.

விசேஷப் பண்பு

ஆட்டு உரோமத்துக்குச் சில விசேஷப் பண்புகள் உள்ளன. இது மிகமிக உறுதியானது. நீடித்து உழைக்கக் கூடியது. நெகிழும், நீளும் தன்மை உடையது. தீப்பற்றினால் கருகி அணைந்து போகுமே தவிர எரிந்து போகாது. நீரையும் ஈரத்தையும் கிரகித்துக்கொள்ளும். ஓர் உரோம இழைக்கு அதே பருமன் உள்ள தங்க இழைக்குச் சமதையான உறுதி உண்டு. எத்தனை முறை வளைத்தாலும் ஒடியாது. அதன் இயல்பான நீளத்தைப் போல் இரு மடங்கு நீளம்வரை அதை இழுத்து நீட்டலாம். இப்படி இழுத்து நீட்டிய பிறகு இழுப்பதை நிறுத்திவிட்டால் பழைய நிலைக்குத் திரும்பிவிடும். தன்னுடைய எடையில் பாதி அளவு எடையுள்ள ஈரத்தை உறிஞ்சும் சக்தி இதற்கு உண்டு. இந்த ஈரம் உரோமத்துக்குள்ளேயே போய் விடுவதால் ஈரம் உறிஞ்சிய கம்பளி ஆடையைத் தொட்டால் நனைந்தது போன்று இருக்காது. இப்படி உறிஞ்சப்பட்ட ஈரம் மெதுவாகத்தான் அதிலிருந்து வெளியேறும். ஈரத்தை உறிஞ்ச உறிஞ்ச அதிலிருந்து வெப்பம் வெளியேறுகிறது. இதனால் தேயிலைத் தோட்டங்களில் மழை பெய்து கொண்டிருக்கும்போது கம்பளியால் உடலை மூடிக் கொண்டு தேயிலைக் கொழுந்து கிள்ளுவதால் தோட்டத் தொழிலாளிகளுக்குச் சளி பிடிப்பதில்லை. கம்பளித் துணியில் உள்ள நுண்ணிய துவாரங்களில் காற்று நிரம்பி யிருக்கிறது. இதனால் வெயில் காலத்தில் இந்தக் காற்று உடல் வெப்பத்தை ஈர்த்துக் கொள்ளுகிறது. இதனால் கம்பளி கோடையில் குளுகுளு என்றும் குளிர் காலத்தில் வெது வெதுப்பாகவும் உள்ளது.

ஆட்டின் உரோமத்தை ஒருவித செதில் போன்ற பொருள் மூடியிருக்கும். இதனால் அந்த உரோமம் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு சடைப் பட்டுவிடும். இதைத் தடுக்க உரோமத்தை குளோரின் அல்லது ஏதாவது ஒரு என்சைம் (enzyme) அல்லது பப்பாளியிலிருந்து கிடைக்கும் பப்பைன் (Papain) கலந்து நீரில் கழுவ வேண்டும். அப்போது உரோமங்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டி முடிச்சுப் படாதிருக்கும்.

ரகம் பிரித்தல்

பருத்தி நூலை 40, 60, 80, 100, 120 நம்பர் நூல் என நாம் கூறுகிறோம். எவ்வளவுக்கு எவ்வளவு நம்பர் கூடுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்த நூல் நயமானது. விலையும் கூடுதல். இதேபோல் ஆட்டு ரோமத்தையும் அதன் நயத் தன்மைக்கு ஏற்பப் பிரித்து 20 முதல் 100 வரை எண்கள் கொடுத்திருக்கிறார்கள்.

சுத்தம் செய்தல்

பச்சை உரோமத்தில் 25 முதல் 70 சதவிகிதம் வரை கிரீசும் (Grease) வேறு அசுத்தங்களும் உண்டு. இதனால் இதை 'கிரீஸ் உல்' (Grease Wool) எனச் சொல்லுவார்கள். எனவே அதை நூலாகத் திரித்துத் துணியாக நெய்வதற்கு முன்பு இந்தக் கிரீசை அகற்றி அதைச் சுத்தம் செய்தாக வேண்டும். சோப், தண்ணீர், வாஷிங் சோடா, ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து அந்தக் கரைசலில் உரோமத்தைக் கழுவினால் கிரீஸ் நீங்கி அது சுத்தமாகி விடும். இப்படி உரோமத்திலிருந்து கழுவி நீக்கிய கிரீஸ் லானோலின் (Lanolin) என்ற பெயரில் கொழுப்புப் பொருளாக விற்கப்படுகிறது. கழுவிச் சுத்தம்செய்த ரோமத்தை ரோலர்களில் கொடுத்து அழுத்திச் சீப்பு ஒன்றால் சிக்கெடுப்பார்கள். இதற்கு கோம்பிங் (Combing) எனப் பெயர்.

நெய்தல்

இப்படிச் சிக்கெடுத்த உரோமத்தை நூலாக நூற்றுத் துணியாக நெய்வார்கள். இப்படி நெய்வதற்கு முன்பு உரோமத்துக்குச் சாயமேற்றுவார்கள். கம்பள ஆடைகளை அந்துக்கள் கடித்து கெடுத்துவிடாதிருக்க சில வகை ரசாயனக் கரைசல்களிலும் நனைப்பார்கள். இந்த ரசாயனக் கலவை பிறகு எத்தனை தடவை துணியைத் துவைத்தாலும் நீங்குவதில்லை. முன்பெல்லாம் கம்பளி நூல் நூற்கவும் துணி நெய்யவும் கையாலியங்கும் ஒருவித சர்க்காவும் தறியும் தான் பயன்பட்டு வந்தது. இப்போது நூற்கவும் நெய்யவும் மிக நவீன இயந்திர சாதனங்கள் பயன்படுகின்றன.



☐ எட்டாயிரத்து எண்ணூற்று எண்பத்தெட்டு என்பதை எண்ணால் எழுதினால் 8,888 என்று எழுதுவீர்கள் இல்லையா? அதே மாதிரி பன்னிரண்டாயிரத்து பன்னிரண்டு நூற்றுப் பன்னிரண்டு என்பதை எப்படி எழுதுவீர்கள்?

(விடை: 13212 என்றுதான் எழுதுவோம்.)

☐ ஒரு குடியானவனிடம் ஏராளமான பசுமாடுகளும் கோழிகளுமிருந்தன. அவைகளை அவற்றின் கால்கள், தலைகளைக் கொண்டுதான் அவன் கணக்குப் பார்ப்பது வழக்கம். 'முப்பத்தி நாலு தலைகளுக்கும் எண்பது கால்களுக்கும் உரிய பசுமாடுகளும், கோழிகளும் என்னிடம் இருக்கின்றன' என்கிறான் அவன். அப்படியென்றால் அவனிடமுள்ள பசுமாடுகள் எத்தனை, கோழிகள் எத்தனை?

(விடை: ஆறு பசுக்கள், இருபத்தி எட்டுக் கோழிகள்.)

☐ ஒரு கூடைப் பந்தின் எடை, பத்தரை அவுன்ஸ்களும் அதன் எடையில் பாதியும் சேர்ந்தது. அப்படியானால் அதன் நிறை எவ்வளவு?


(விடை: இரண்டு பாதி சேர்ந்து ஒன்று ஆகும் இல்லையா? பத்தரை அவுன்ஸ் என்பது கூடைப் பந்தின் பாதி நிறை. அப்படியானால் அதன் முழு நிறை 21 அவுன்ஸ்கள்.)

☐ ஒரு அங்குலச் சதுரமுடைய ஒரு காகிதத்தை எடுத்து அதை உருண்டையாகக் கோலி போலக் கசக்கிக்கொள்ளுங்கள். காலி சோடா பாட்டிலையோ அல்லது பால் பாட்டிலையோ மேஜையின் ஓரத்தில் படுக்கை நிலையில் வையுங்கள். காகிதக் கோலி உருண்டையைப் பாட்டிலின் கழுத்துப் பகுதியில் இருக்கும்படி உள்ளே தள்ளுங்கள் — அதாவது பாட்டிலின் வாய்ப் பகுதியிலிருந்து ஓர் அங்குலம் உள்ளே இருக்கும்படி உங்கள் விரலையோ பென்சிலையோ பயன்படுத்தி இதைச் செய்யலாம். மேஜை மீதிருந்து நகராதபடி பாட்டிலின் வாய்ப் பகுதியில் உங்கள் வாயால் ஊதுங்கள். என்ன நிகழும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

(விடை: நீங்கள் பாட்டிலுக்குள் ஊதினால் காகித உருண்டை பாட்டிலிலிருந்து பறந்து வெளியே வந்துவிழும்!)

☐ ஒரு கண்ணாடித் தம்ளரில் நிறைய அதன் விளிம்பு வரை நீரை ஊற்றுங்கள். அதில் ஒரு சின்ன கார்க் துண்டைப் போட்டு மிதக்க விடுங்கள். அது தம்ளரின் ஓர் ஓரத்தில் போய் ஒதுங்கிக் கொண்டு நிற்கும். என்ன செய்தாலும் அது நடுவில் வந்து மிதக்காது. உங்கள் தோழர்களிடம் சவால் விடுங்கள். ''யாராவது இந்தக் கார்க்கை தம்ளரின் நடுவில் மிதக்கச் செய்ய முடியுமா?'' என்று. யாராலும் முடியவே முடியாது. எத்தனை முறை தள்ளினாலும் அது ஓரத்தில்தான் போய் ஒதுங்கும். உங்கள் தோழர்கள் உதட்டைப் பிதுக்கித் தங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டதும் நீங்கள் அந்தச் சாதனையை நிகழ்த்திக் காட்டலாம். எப்படி? கண்ணாடித் தம்ளரில் மெது மெதுவே இன்னும் கொஞ்சம் நீரை ஊற்றுங்கள். அதன் நீர் மட்டம் அதன் விளிம்புக்கு மேலாகக் கொஞ்சம் வரும்வரை நிதானமாக நீரை ஊற்றுங்கள். இப்போது ஓரத்தில் ஒதுங்கியிருந்த கார்க் தானாகவே நடுமையத்துக்கு வந்து நிற்கும். ஏன்? நீரின் மேல் பரப்பு இப்போது ஓரத்தை விட நடு மையத்தில் உயர்ந்திருக்கும். உயர்ந்த பகுதியில்தானே பொருள்கள் மிதக்கும்.

— வாண்டு



பறக்கும் தட்டு

மாலை மணி ஐந்து இருக்கும். அந்த உயர்நிலைப் பள்ளியின் ஆய்வுக் கூடத்திலிருந்த மாணவர்களின் பெரும் பகுதியினர் தங்களுடைய வேலையை முடித்து போய் விட்டார்கள். ரவி மட்டும் அங்கிருந்து நகர முடியவில்லை.

அன்று அறிவியல் வகுப்பில் கொசுவைப் பற்றிப் பாடம் நடத்திய ஆசிரியர் அப்பாடம் மாணவர்களுக்கு நன்கு புரியும் வகையில் தனது திறமையெல்லாம் காட்டிப் பல்வேறு விதங்களில் விளக்கி விட்டுக் கொசுவின் வாழ்க்கைப் பருவங்களை மிக அழகாகப் படம் வரைந்துபோட்டிருந்தார். மாணவர்கள் படத்தை வரைந்து அதற்குக் குறிப்பு எழுதிக் காட்டி விட்டுத்தான் செல்ல வேண்டும் என்பது ஆசிரியரின் கண்டிப்பு.

ஆய்வுக்கூடத்துக் கரும் பலகையிலிருந்த படத்தை 'பிராக்டிக்கல்' நோட்டில் வரையப் படாத பாடுபட்டுக்டுக் கொண்டிருந்தான் ரவி.

அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'நல்ல பாடம், நல்ல படிப்பு!' என்று அதைக் கொண்டான். எப்படி முயன்றும் ஒழுங்காக அவனுக்குப் படம் போட வரவில்லை.

ரப்பரை வைத்து அழித்து அழித்துத் தாளைத் தேய்த்துக் கொண்டிருந்த ரவியின் அருகே வந்த ஆசிரியர், ''ரவி நீ ஒழுங்காகப் படம் போட்டுக் குறிப்பு எழுதிக் காட்டிவிட்டுத்தான் வீட்டுக்குப் போக வேண்டும். நான் தலைமை ஆசிரியரைப் பார்த்து விட்டு வருகிறேன். அதற்குள் முடித்து வை'' என்று கூறி விட்டுப் போய்விட்டார்.

ஆசிரியர் தலை மறைந்ததோ இல்லையோ ''அப்பாடா, கொஞ்ச நேரம் நிம்மதியாக இருக்கலாம்'' என்று கூறிக் கொண்ட ரவி ஆய்வுக் கூடத்துக் கதவை உட்புறம் தாழிட்டுக் கொண்டான். பிறகு சோம்பல் முறித்தபடி அங்கிருந்த பெஞ்சியில் படுத்தான்.



ஜென்

'படபடவென்று' கதவு தட்டப்படும் ஓசைக் கேட்டுக் கண் விழித்தான் ரவி. ஒரே கும்மிருட்டு. 'என்ன இது படுத்தவன் தூங்கி விட்டேனா? வாத்தியார் வந்து விட்டாற் போலிருக்கிறதே! படத்தை இன்னும் முடிக்கவில்லையே?' பதைபதைப்போடு தட்டுத் தடுமாறி மின்விளக்கு 'சுவிட்'சைப் போட்டுவிட்டு ஓடிச் சென்று கதவைத் திறந்தான். அங்கே அவன் கண்ட காட்சி...?

விநோத உடையில் மூவர் நின்று கொண்டிருந்தார்கள்.

தலையில் இரும்புத் தொப்பி, கண்களில் மிகப் பெரிய கண்ணாடி, கால்களில் தடித்த காலணி, வெண்மை நிற உடை — ஏறத்தாழ வானவெளி வீரர்களைப் போன்று அவர்கள் காணப்பட்டார்கள்.

வாய் பிளந்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த ரவியை தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தனர் அவ் விநோத மனிதர்கள்.

ஆய்வுக் கூடத்தைச் சுற்றி நோட்டம்விட்ட பின் அந்த மூவரில் ஆஜானுபாகுவாக இருந்த ஒருவர், ''பரவாயில்லை நாம் சரியான இடத்திற்குத்தான் வந்திருக்கிறோம். நமக்குத் தேவையான விஷயம் இங்கு கிடைக்கும்'' என்று கூறியபடி ரவியைப் பார்த்தார்.

அவன் இன்னமும் 'ஆ'வென்று அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தத் தடித்த உருவம், ''தம்பி என்ன அப்படிப் பார்க்கிறாய்?'' என்றது.

''நீங்க ... நீங்க ...'' ரவிக்கு வாய் குழறியது. மெதுவாகச் சிரித்துச்

கொண்ட அவர் ''நாங்கள் மனிதர்கள் தான். ஆனால் இந்த உலகத்தைச் சேர்ந்தவர்களல்ல'' என்றார்.

''வேறு உலகத்தைச் சேர்ந்தவர் களா?'' ரவிக்கு உடலில் மின்சாரம் பாய்வது போல் இருந்தது.

அவர் தொடர்ந்தார்: '' ஆமாம், வேற்றுலகத்துக்காரர்கள்தான். எங்கள் உலகத்தில் ஏற்பட்டுள்ள முக்கியப் பிரச்சினை ஒன்றைத் தீர்க்க வழி காண வந்துள்ளோம். பறக்கும் தட்டில் வந்த நாங்கள் அதை உங்கள் விளையாட்டு மைதானத்தில் இறக்கியுள்ளோம்'' என்றார்.

''பறக்கும் தட்டா? நான் போய்ப் பார்த்து விட்டு வருகிறேன்'' என்று ஓட முனைந்த ரவியைத் தடுத்து நிறுத்தி, ''தம்பி, பறக்கும் தட்டைப் பிறகு பார்க் கலாம். உன்னிடம் சில விஷயங்கள் பேச வேண்டும்'' என்றவர் அருகிலிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண் டார். அவரோடு வந்த மற்ற இருவரும் நாற்காலியின் இருபுறமும் அவருக்கு மெய்க்காவலர் போல் நின்று கொண் டார்கள்.

அவருக்கு எதிர்த்தாற் போல் இருந்த பெஞ்சில் அமர்ந்து கொண்ட ரவி அவரை ஒரு கேள்வி கேட்கத் துடித்தான். பிறகு கேட்டும் விட்டான்.

''வேறு உலகத்துக்காரராகிய நீங்கள் தமிழ் நன்றாகப் பேசுகிறீர்களே! எப்படி?''

''ஹ...ஹ...ஹா' என்று வெடிச் சிரிப்பை உதிர்த்த அவர் ''தம்பி, நாங்களும் தமிழர்கள்தான்'' என்றார்.

''தமிழர்களா?'' ஆச்சரியத்தோடு கேட்டான் ரவி.

''ஆமாம் தம்பி, எங்கள் பூர்வீகம் தமிழகம்தான்.''

''அது எப்படி?''

''சுமார் ஆயிரத்து ஐநூறு ஆண்டு களுக்கு முன்பு என் தாத்தாவுக்கும், பாட்டிக்கும் திருமணம் நடந்தது. ஒருநாள் அவர்கள் மயில் வாகனத்தில் ஏறி உல்லாசமாகக் கிளம்பினார்கள். உற்சாக மிகுதியில் உயர உயரப் பறந்தார்கள். எவ்வளவு உயரம் பறந் தார்கள் என்றே தெரியாது. இரவு வந்தது. அப்போது ஏதோ ஒன்றில் வாகனம் தட்டி நின்றது. அது ஒரு நிலப்பரப்பு. அதுதான் இப்போது நாங்கள் இருக்கும் உலகம். அன்று இரவு அங்கு தங்கிய எங்கள் தாத்தா வும், பாட்டியும் அங்கேயே வசிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

''நீங்கள் வாழும் அந்த உலகம் எங்கிருக்கிறது? என்ன பெயர்?'' ஆவலோடு கேட்டான் ரவி.

''சொல்வேனா...? உஹூம். இன்னும் உங்கள் உலகத்துக்காரர்கள் எங்கள் உலகத்தைக் கண்டு பிடிக்கவில்லை. கண்டு பிடிச்சிட்டா அவ்வளவுதான். இங் கிருந்து அங்கு வந்து குடியேற ஆரம் பித்து விடுவார்கள். இப்போதே நாங்கள் ஜனத்தொகையை எப்படிக் கட்டுப்படுத்துவது என்று தெரியாமல் முழித்துக் கொண்டிருக்கிறோம்.''

''என்ன உங்கள் உலகத்தில் அவ் வளவு ஜனத்தொகையா?''

''அதை ஏன் தம்பி கேட்கிறே? எங்கள் உலகத்தில் ஜனத்தொகை பெருகிக் கொண்டே போகிறது. பிறப்ப வர்கள் அனைவரும் சட்டுப்புட்டென்று இறப்பதில்லை. கணக்கு போட்டுப் பார்த் ததில் இன்னும் பத்து வருடங்களில் நிற் பதற்குக் கூட அங்கு இடமில்லாமல் போய்விடும்போல் தெரிகிறது'' வேதனை யோடு கூறினார் வேற்றுலகத்துக்காரர்.

''அப்படியா...?''

''பிறப்பவர்கள் அனைவரும் முன்னூறு நானூறு வருஷங்கள் வரை வாழ் கிறார்கள்.''

''அடேயப்பா..!'' என்று வியந்த ரவி ''அது எப்படிச் சாத்தியம்?'' என்றான்.

''என் தாத்தாவும், பாட்டியும் மயில் வாகனத்தில் ஏறியவர்கள் நேரே பொதிகை மலைக்குச் சென்று ஏதோ பச்சிலையைப் பறித்துச் சாப்பிட்டிருக் கிறார்கள். அந்தப் பச்சிலை சாப்பிட்ட வர்கள் லேசில் இறக்க மாட்டார் களாம். என் தாத்தாவும், பாட்டியும் ஐநூறு வருஷங்கள் வாழ்ந்தார்கள். அதன் பின் என் அப்பா, அம்மா — அந்தப் பரம்பரை நானூறு வருஷங்கள் வாழ்ந்தார்கள். இப்போது என் தலை முறையைச் சேர்ந்தவர்கள் முன்னூறு வருஷமாக உயர் வாழ்ந்து வருகிறோம். அந்தப் பச்சிலை வீரியம் தொடர்ந்து வேலை செய்து கொண்டிருக்கிறது'' பெருமூச்சு விட்டுக் கொண்டார் அவர்.

''கேட்கக் கேட்க வியப்பாக இருக் கிறது'' என்று மூக்கு மேல் விரலை வைத் துக் கொண்டான் ரவி.

''இந்த ஜனத்தொகை குறைக்கும் விஷயமாகத்தான் பூலோகம் வந்தோம் தம்பி. உனக்கு ஏதாவது வழி தெரி யுமா?'' மனிதர் கெஞ்சும் குரலில் கேட்டார்.

புன்னகைத்துக் கொண்டே ரவி, ''இந்த விஷயத்துக்கு இந்த உலகத் திற்கு — அதுவும் இந்தியாவிற்கா வர வேண்டும்?'' என்று கூறியவன் சற்று யோசித்தான். பின், ''அந்த ஒரே வழிதான் இருக்கிறது'' என்றான்

''எந்த வழி, எந்த வழி? உடனே கூறு தம்பி'' பறந்தார் மனிதர்.

ரவி நிதானமாகக் கூறினான்... ''எங்கள் நாட்டில் சமீபத்தில் அணுகுண்டு வெடித்தார்கள். எப்படியாவது எங்கள் பிரதமரிடமிருந்து அனுமதி பெற்று விஞ்ஞானி சேத்னாவைச் சந்தித்து இரண்டு அணுகுண்டு வாங்கிப் போய் உங்கள் உலகத்தில் இரண்டு இடங்களில் போடுங்களேன்!''

ரவி இவ்விதம் கூறியதுதான் தாமதம். மூன்று பேரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

''என்ன என்ன, ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்?'' என்றான் ரவி.

''தம்பி எங்கள் உலகத்தில் இருக்கும் உயர்நிலைப் பள்ளிக்கூடத்து ஆய்வுக் கூடங்களில் எங்கள் பள்ளி மாணவர்கள் அணுகுண்டு தயாரிக்கிறார்கள்!''

''அத்தனை சுலபமாகவா அங்கு அணுகுண்டு தயாரிக்கப்படுகிறது?''

''ஆமாம் தம்பி சுமார் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பே எங்கள் நாட்டவர் அணுகுண்டு தயாரித்து விட்டனர்.

''அது எப்படி முடியும்?''

''ஏன் முடியாது? 'அணுவைத் துளைத்து ஏழு கடலைப் புகுத்தி' என்று பாட்டெழுதிய ஔவைப் பாட்டி அணுகுண்டைப் பற்றி விவரமாக எழுதி வைத்திருக்கிறார்கள். மயில் வாகனத்தில் ஏறுவதற்கு முன் அந்த ஓலைச் சுவடிகளை வாங்கி வைத்திருக்கிறார் என் தாத்தா. அந்த ஓலைச்சுவடியிலுள்ள அரிய விஷயங்களை வைத்து எங்கள் நாட்டவர் அணுகுண்டு தயாரித்து விட்டார்கள்.

''பரவாயில்லையே'' என்று வியந்து கூறிய ரவி ''ஏன், அந்த அணுகுண்டுகளைப் போட்டு ஜனத் தொகையைக் குறைப்பதுதானே?''

''அதுதான் முடியாது. நான் அந்த உலகிற்கு அரசன். அணுகுண்டை வெடித்தேனானால் மக்கள் புரட்சி செய்து என் அரசாங்கத்துக்குப் பெரும் தொல்லை தருவார்கள். ஆகவே வேறு ஏதாவது வழி இருந்தால் கூறு.''

சிறிது யோசித்த ரவிக்கு 'டக்' கென்று ஒரு யோசனை தோன்றியது.

''ஏங்க, உங்க நாட்டவருக்கு வியாதி வருமில்லையா?'' என்றான்.

மூன்று மனிதர்களும் விழி விழி என்று விழித்தார்கள். பின் தலைவர் கேட்டார் ''வியாதி என்றால்?''

''வியாதி என்றால், அதான் தும்மல், இருமல், ஜுரம், காய்ச்சல், அம்மை!''

''நீ சொல்வது எங்களுக்கு ஒன்றும் புரியவில்லையே தம்பி.''

''என்னங்க அணுகுண்டு அப்படி இப்படி என்று கூறுகிறீர்கள். வியாதி பற்றித் தெரியாது என்கிறீர்களே?'



உங்களால் ஊகித்துச் சொல்ல முடியுமா? உங்கள் ஊகத்தை ஒரு கார்டிலெழுதி 'ஆசிரியர் கோகுலம் கல்கி பூங்கா, சென்னை - 31' என்ற விலாசத்துக்குப் போடுங்கள். உங்கள் ஊகம் சரிதானா என்று பார்க்கலாம்!

''உண்மையிலேயே தம்பி வியாதின்னு என்னவென்று தெரியாது. கொஞ்சம் விவரமாத்தான் சொல்லேன்.''

''வியாதி வந்தா உடம்பு கெட்டு விடும். சரியாகக் கவனிக்கவில்லை என்ருல் இறந்து போயிடுவாங்க.''

''அப்படியா? அதிசயமாக இருக்கே! வியாதி எப்படி வரும்?''

''கண்ணுக்குத் தெரியாத விஷக் கிருமிகள் உடலினுள் புகுந்து விட்டால் வியாதி வரும்.''

''தம்பி தம்பி அந்தக் கிருமிகளைக் கொஞ்சம் கொடு... எங்கள் உலகத்தைக் காப்பாற்று...'' பரிதாபமாகக் கெஞ்சினுர்.

ரவி அந்த ஆய்வுக் கூடத்திலுள்ள ஒரு பீரோவைத் திறந்து வெண்மை நிற முள்ள — வட்டமான இரண்டு பிளாஸ்டிக் டப்பாக்களை எடுத்துக் கொண்டு வந்து அவர்களிடம் காட்டினுன்.

''என்ன தம்பி இது, கண்ணுக்குத் தெரியாது என்று கூறினுய். இவ்வளவு பெரிதாக இருக்கிறதே?'' என்ருர் வேற்றுலகத்து அரசர்.

''ஐயோ, ஐயோ! இது கிருமியில்லே. இது பிளாஸ்டிக் டப்பா. எங்கள் உயிரியல் ஆசிரியர் கஷ்டப்பட்டு சேகரித்தவை. டப்பாவின் உள்ளே பாருங்கள்.'' ரவி டப்பாவை அவர்கள் கண்களுக்கு அருகே பிடித்தான்.

''என்ன தம்பி விளையாடரே, கண்ணுக்குத் தெரியாது என்று சொன்னே, உள்ளே பெரிய பெரிய கிருமி இருக்கே.''

''அது கிருமி இல்லே, கொசு. இதோ டப்பாவினுள் இருப்பது 'அனுபெலிஸ்' என்ற வகையைச் சேர்ந்த கொசுக்கள். என் வலக்கை டப்பாவில் இருப்பது 'பெண் அனுபெலிஸ்' இடக்கை டப்பாவில் இருப்பது ஆண் அனுபெலிஸ். மலேரியா என்ற ஜுரத்தைப் பரப்புவது இந்தப் பெண் அனுபெலிஸ் கொசுக்கள் தான்.''

''ஆண் அனுபெலிஸ் வியாதியைப் பரப்பாதா?''

''பரப்பாது. அதற்கு அச்சக்தி கிடையாது.''

''ம். எங்கேயும் ஆண்கள் சாதுவாகத்தான் இருப்பார்கள் போல் தெரிகிறது'' என்று கூறிக் கொண்டே அவர், ''தம்பி, தம்பி, அந்த டப்பாவைக் கொடு'' என்று ஆவலோடு கையை நீட்டினுர்.

''ஜாக்கிரதை. இந்தப் பெண் அனுபெலிஸ் மலேரியா ஜுரம் வந்த மனிதனைக் கடித்துள்ளது. இப்போது இக் கொசு ஒருவனைக் கடித்து விட்டால் அவனுக்கு மலேரியா ஜுரம் வந்து விடும். இதோ இந்த ஆண் அனுபெலிஸ் கொசுவையும் வைத்துக் கொள்ளுங்கள். கொசு உற்பத்திக்குப் பயன்படும்'' என்று கூறி இரண்டு டப்பாக்களையும் வேற்றுலக அரசரிடம் கொடுத்தான் ரவி.

டப்பாக்களை வாங்கித் தனது பைகளில் பத்திரப்படுத்திக் கொண்ட அவர், ''தம்பி ரொம்ப நன்றி ... கைவசம் வேறு ஏதாவது கிருமி...''

''இப்போதைக்கு வேறென்றுமில்லை. மறுமுறை நீங்கள் வரும் போது ஏற்பாடு செய்கிறேன்'' என்ருன் ரவி.

வேற்றுலகத்து மனிதர்கள் புறப்பட்டார்கள்.

அவர்களை வழியனுப்ப ரவி மைதானத்திற்குச் சென்ருன்.

அங்கிருந்த பறக்கும் தட்டைக் கண்டு ஆச்சரியமுற்ற ரவி அதைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

பறக்கும் தட்டில் ஏறுவதற்கு முன் அந்த வேற்றுலகத்து அரசர் ரவியிடம் ''தம்பி தயவு செய்து நாங்கள் வந்து போன விஷயத்தை மட்டும் யாரிடமும் கூறி விடாதே. மறுமுறை வரும்போது உனக்கு ஒரு பறக்கும் தட்டு எடுத்து வருகிறேன், வரட்டுமா?'' என்று கூறிப் பறக்கும் தட்டில் ஏறிக் கொண்டார்.

பறக்கும்தட்டு பறந்தது. அதைக் கண் கொட்டாமல் பார்த்தபடி நின்ருன் ரவி.

மறுநாள் தினசரி பத்திரிகைகளில் முதற் பக்கத்தில் கொட்டை எழுத்தில் பிரசுரமாகி இருந்த செய்தியைப்படித்து ரவி அதிர்ந்து விட்டான்.

'பாகூர் கிராமம் வயல் வெளியில் பறக்கும் தட்டு ஒன்று நொறுங்கிக் கிடந்தது. அந்தப் பறக்கும் தட்டு அதிகாலையில் வானத்திலிருந்து ஆடி ஆடிக் கீழே இறங்கி விழுந்ததாக நேரில் பார்த்த கிராமவாசி ஒருவர் கூறினுர். பறக்கும் தட்டிலிருந்து மூன்று சடலங்களை டாக்டர்கள் பரிசோதித்ததில் மூவரும் மலேரியா ஜுரத்தால் பாதிக்கப்பட்டவர்களென்று தெரிகிறது. ஜுர வேகத்தில் பறக்கும் தட்டை ஓட்ட இயலாமல் விபத்திற்குள்ளாகி யிருக்கிருர்கள் என்று கருதப்படுகிறது. இது விஷயமாக தீவிர விசாரணை நடைபெற்றுக் கொண்டு வருகிறது.''

செய்தியைப் படித்த ரவி 'ஐயையோ' என்று அலறினுன்.

அதே நேரத்தில் 'டமடம'வென்று ஆய்வுக்கூட அறைக் கதவு பலமாகத் தட்டப்படும் ஓசை கேட்டது. ரவி திடுக்கிட்டுக் கண்விழித்தான். 'கண்டதெல்லாம் கனவா?'


கதவைத் திறக்க ரவி ஓடினுன்.

சிரிக்கச் சிரிக்க...



"ஏண்டா உங்கப்பா ஆட்டோ ரிக்ஷாவிலே போறார். காரிலேன்னு போவார்?"

"மருந்தைக் குலுக்கிச் சாப்பிட மறந்துட்டாராம்!"



"டாக்டர் சார், ஞாபக மறதி ரொம்ப ஜாஸ்தியா இருக்கு."

"எத்தனை நாளா அப்படி இருக்கு?"

"எது, எப்படி இருக்கு?"



"பல் வலியாலே இப்படித் துடிக்கிறயே. என்னுடையதா இருந்தால் நான் உடனே பிடுங்கிடுவேன்!"

"உன்னுடைய பல்லாக இருந்தா நான் கூடத்தான் உடனே பிடுங்க ஏற்பாடு செய்திருப்பேன்!"

சாமா...



ஒரு கஞ்சப் பிரபு பத்திரிகை ஆபீசுக்குக் கடிதம் எழுதுகிறார்: இனிமேல் உங்கள் பத்திரிகையில் கஞ்சர்களைப் பரிகாசம் செய்து ஜோக்குகள் வெளியிட்டால் பத்திரிகையை ஓசியில் வாங்கிப் படிப்பதை நிறுத்தி விடுவேன்.

● ● ●


"உன் பிறந்த நாளுக்கு என்ன கொடுப்பது?"

"உங்க கையால் பண்ணினது எதாவது கொடுங்கள்!"

"என் கையாலா? நான் பொம்மை பண்ணுகிறவன்னு?"

"நிறையப் பணம் பண்றீங்களே, அதைத்தான் கேட்டேன்."





"ஜாக்பாட்லே லட்ச ரூபாய் விழுந்துதே என்ன செய்தே?"

"இதோ வீடு கட்டிட்டேன்!"



2

தன்னிச்சையாக, எவ்விதப் பிணைப்பும் பந்தமும் இன்றி வாழ்ந்த குண்டோதரனுக்குப் பூங்குழலி புதிய பொறுப்புக்களையும் பிணைப்புக்களையும் கொடுத்து விட்டாள். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு' என்பார்களே அதுபோலத்தான் வந்தாள் அவள். அவ்வளவு பலஹீனமாகவும் மோசமாகவும் இருந்த அவள் கானகத்தில் எங்கோ ஓர் இடத்தில் வீழ்ந்து உயிர் விட்டிருக்கலாம். குண்டோதரனையோ அவன் இருப்பிடத்தையோ அறியாதவள் பூங்குழலி. அப்படி இருக்க அவள் அங்கு எப்படி வந்தாள்? உலகையே வெறுத்து ஒதுங்கி, பழிவாங்கும் ஆவேசத்தோடு: வாழ்ந்து வந்த குண்டோதரனின் குடிசைக்கு வந்து அவனிடம் தன் குழந்தையை ஒப்படைத்த பிறகு அவள் ஆவி பிரிவானேன்? விதியின் விளையாட்டுக்கு விளக்கமோ விடையோ யாராலும் கூற முடியாது.

உதிர்ந்த மலராகி விட்ட பூங்குழலியை ஒரு சந்தன மரத்தடியிலே புதைத்து அவளது ஆன்மா சாந்தியடைய வேண்டுமென்று கண்ணீர் உகுத்தான் குள்ளன் குண்டோதரன். அவனுக்கும் இதயம் உண்டு. அதன்ஓரத்தில் கொஞ்சம்கருணையும் இருந்தது. குடிசைக்குத் திரும்பியவனைக் குழந்தை விஜயனின் அழுகுரல் வரவேற்றது. இதுவரை இயந்திரமாக இயங்கியவன் இப்போது என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தான். குழந்தை. குடும்பப்பாசம், பந்தம் என்று எதுவுமே அறியாதவன் அவன். குழந்தைகளைப் பார்த்திருக்கிறான். ஆனால் அவை ஏன் அழுகின்றன. எதற்காக அழுகின்றன, 'எப்போது அழும் என்றெல்லாம் அவனுக்குத் தெரியாதே! தவித்தான். செய்வதறியாது திகைத்தான். அழும் குழந்தையைத் தூக்கிக் கொண்டு இங்குமங்கும் ஓடினான். 'அழாதே, அழாதே' என்று தன் கட்டைக் குரலில் அதட்டினான். அதன் அழுகை அதிகமாயிற்றே தவிர நிற்கவில்லை! .

என்ன செய்வது, எப்படி அதன் அழுகையை நிறுத்துவது என்று தெரியவில்லை. அமைதியாக இருந்த குடிசையில் விஜயனின் 'வீல்வீல்' அலறல் தாங்க முடியாத தலை வேதனையைத் தந்தது குண்டோதரனுக்கு. குழந்தையைத் தன் இரு கைகளில் ஏந்தியவாறு இங்குமங்கும் உலாவிய போது தற்செயலாக அவனது விரல் குழந்தையின் வாயருகே சென்றது. சட்டென்று அவ்விரலைப் பற்றிச் சுவைக்கலாயிற்று குழந்தை. அப்போது சற்றே அது தன் அழுகையையும் நிறுத்திற்று. குண்டோதரனுக்கும் பளீரென்று ஓர் உண்மை விளங்கிற்று. ''குழந்தைக்குப் பசி!... அதனால்தான் அழுதிருக்கிறது. நான் ஒரு முட்டாள், இதுகூடத் தெரியாமல், 'அழாதே, அழாதே' என்று அதட்டிக் கொண்டிருக்கிறேன்'' என்று தனக்குத்தானே கூறியபடி



விஜயனை மெதுவாகக் கீழே வைத்து விட்டு ஓடினான் வெளியே. பின் பக்கத்தில் கட்டி இருந்த வெள்ளாட்டின் பாலை வேக வேகமாகக் கறந்து வந்தான். உலைக்களத்துத் தீயிலே அதைக் காய்ச்சினான். பிறகு பக்குவமாக அதை ஆற்றினான். பரபரத்துக் கொண்டிருக்கும் அந்தப் பச்சிளங் குழந்தையின் பசியைப் போக்கினான். பாலுண்ட களைப்பும், வெகு நேரம் அழுததினால் ஏற்பட்ட ஆயாசமுமாகக் குழந்தை கண்மூடித் தூங்கலாயிற்று. குண்டோதரனும் ஒருநீண்ட நிம்மதிப் பெருமூச்சை அவிழ்த்து விட்டான். 'அப்பாடா!' என்று.

இப்போது அவன் எண்ணமெல்லாம் அந்தக் குழந்தையைப் பற்றியதாகவே மாறியது. சின்னக் குழந்தை அடக்கமாகப் படுத்துக் கொள்ள என்ன செய்யலாம் என்று யோசித்தான். ஒரு பெரிய மரத்தை வெட்டினான். அதன் அடிமரத்தைத் துண்டு போட்டு அதன் நடுவில் குடைந்து தொட்டிலைப் போலச் செய்தான். அதனுள் மெத்தென்று கரடியின் கனத்த தோலைக் கதகதப்புக்காக விரித்தான். தூங்கும் குழந்தையை அந்த விநோத மரத் தொட்டிலினுள்ளே கிடத்தினான். குழந்தை சிணுங்கினால் அந்த அடிமரத் துண்டைக் காலால் உதைத்து ஆட்டுவான். உருண்டையான அடிப்பாகத்தைக் கொண்ட அது உருண்டு உருண்டு ஆடும். அந்தத் தாலாட்டிலே குழந்தையின் சிணுங்கல் நிற்கும். பசியால் அழும் போதெல்லாம் ஆட்டின் பாலைப் புகட்டுவான். குழந்தை கைகால்களை உதைத்துக் கொண்டு சிரித்து விளையாடும் போது சூரிய ஒளியிலே பசும்புல் தரையிலே அதை விட்டு வைப்பான். கானகத்துப் பறவைகளெல்லாம் 'கக்கக்' என்று சிரித்து மகிழும் அந்தச் சின்னக் குழந்தையின் மீதாகப் பறந்து கானமிசைத்து விளையாட்டுக் காட்டும். சின்னக்குழந்தை சிரித்து, அழுது, சிணுங்கி, சினந்து, குப்புறக் கவிழ்ந்து, தவழ்ந்து வளரலாயிற்று. கானகத்துக் குழந்தையான அதற்குப் பறவைகளும் அணில், முயல், மான் ஆகியவையும்தான் விளையாட்டுப் பொருள்கள், தோழர்கள். குண்டோதரன் குழந்தையோடு கொஞ்சி விளையாட மாட்டான். அதன் பசிக்கு தூக்கத்துக்குப் பாதுகாப்பாளனாக இருந்தானே தவிர மற்றபடி அவன் சிந்தனையெல்லாம், செயலெல்லாம் உலைக்களமும் சம்மட்டியும் தான். இன்னமும் அவன் எதிர்பார்த்த அந்த அற்புத வாள் உருவாகவில்லை. எத்தனை எத்தனையோ முறை உலோகக் கலவையை உருக்கி வார்த்து விட்டான். ஆனால் அவன் எதிர்பார்த்த ஒப்பற்ற வாள் தோன்றவே இல்லை. அதனால் குண்டோதரன் மனந்தளரவுமில்லை. எப்படியும் ஒருநாள் அப்படி ஒரு வாளை உருவாக்கியே தீருவேன்! என்று விடாமுயற்சியுடன் மீண்டும் மீண்டும் வாளை வார்ப்பான். தட்டி நீட்டித் தகதகக்கச் செய்வான். பிறகு அதன் வலிமையை ஆராயப்பரீட்சிப்பான். பட்ட பாடெல்லாம் வீணாக அது படீரென்று பல துண்டுகளாக உடைந்து அவனைப் பார்த்துச் சிரிக்கும்.

விஜயன் தத்தி நடந்தான். தள்ளாடி விழுந்தான், பிறகு துள்ளி ஓடும் பருவமடைந்தான். வாலிபனாகத் தாத்தாவுக்கு உதவியாக உலைக்களத்திலே உதவி செய்யும் அளவுக்கு உரம் பெற்ற உடலும் ஒப்பற்ற வனப்பும் மிக்க கம்பீரமான காளையாக வளர்ந்தான் விஜயன். பயமென்பதே அறியாதவனாக இருந்தான். அவன் உடலில் ஓடுவது வீரப் பரம்பரையின் ரத்தம் அல்லவா?

விஜயனின் வளர்ச்சியையும், வீரத்தையும், அழகையும் கண்டு குண்டோதரனே மகிழ்ந்து போனான். அவன் தாய் அவனிடம் கூறிய வார்த்தைகள் நினைவுக்கு தரும். ''என் மகன் விஜயனை வீர விஜயனாக்குவது உங்கள் பொறுப்பு'' என்று கூறிக் கண் மூடினான் அல்லவா பூங்குழலி.

''விஜயன்; உனக்கு நான் ஒரு அற்புதமான வாளை உருவாக்கித் தரப் போகிறேன். அதைக் கொண்டு நீ இவ்வுலகையே வெற்றி கொண்டு மாவீரனாக வாழலாம்'' என்று அடிக்கடி கூறுவான் குண்டோதரன். ஆனால் அவன் உருவாக்கிய ஒவ்வொரு வாளையும் விஜயன் வீசிப் பரீட்சித்தான். எந்த வாளுமே அவன் வீச்சுக்கு ஈடுகொடுத்து நிலைக்கவில்லை. ஒரே வீச்சில் அது இரு துண்டாகி விடும்.

எதற்கும் ஒருவேளை வர வேண்டுமல்லவா? அப்படிப்பட்ட வேளை உறுதி

யான வாள் தோன்றுவதற்கும் வந்தது. வழக்கப்படி குண்டோதரன் உருவாக்கிய ஒரு வாளை விஜயன் வழக்கப்படி உலைக்களத்திலுள்ள பட்டறைக் கல்லிலே ஓங்கி வீசினான். வழக்கப்படி துண்டு துண்டாகும் வாள் அன்று அந்த பட்டறைக் கல்லையே துண்டாடி நின்றது. அந்த வாளிலே ஒளி கூடியது. குண்டோதரனோ களி கூத்தாடினான். விஜயனைக் கட்டிக் கொண்டு கண்ணீர் வழியப் பித்தனைப் போலப் பேச முடியாமல் குதித்தான், கும்மாளமிட்டான். பிறகு, ''விஜயா, என் கனவு நனவாகி விட்டது. இப்படியொரு வாளை உருவாக்க எதற்காக இத்தனை ஆண்டுகளாகப் பாடுபட்டேனோ அதை நீதான் நிறைவேற்ற வேண்டும். ஆண்டவன் அதற்காகத் தான் உன்னை என்னிடம் அனுப்பி இருக்கிறான்'' என்றான்.

விஷயத்தை விவரமாகக் கூறும்படி விஜயன் கேட்டான். குண்டோதரன் மாயத் தங்கத்தின் மகத்துவத்தையும் அதைத்தான் பறிகொடுத்த பரிதாபத்தையும் இப்போது அது யாரிடமிருக்கிறது என்பதையும் கூறினான். ''உன்னுடைய வீரத்தையும், என்னுடைய வாளின் உறுதியையும் உலகுக்குத் தெரியப்படுத்த வேண்டிய வேளை வந்து விட்டது விஜயன். அந்தக் கொடிய ராட்சத மிருகத்தை மாய்க்கவே இப்படியொரு வாளை உருவாக்கப் பாடுபட்டேன். வாளை உருவாக்கிய பின் அதைச் சுழற்றும் வல்லமை மிக்கதொரு வீரனைத் தேடிக் கண்டு பிடிக்க எண்ணியிருந்தேன். ஆனால் அத்தகையதொரு வீரனை நானே வளர்க்கும் பொறுப்பை விதி என்னிடமே தள்ளியது. வீர பரம்பரையிலே பிறந்தவன் நீ. உனக்கு ஏற்ற வாள் இதோ! இனி...''

''செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றி இனி நீங்கள் விளக்க வேண்டாம். அந்தக் கொடிய அரக்க மிருகம் வாழுமிடத்துக்கு என்னை அழைத்துப் போங்கள்'' என்றான் விஜயன். அவன் தன் கையிலுள்ள வாளை இப்படியும் அப்படியும் புரட்டிய போது அதன் மீது சூரிய ஒளிபட்டுப் 'பளீர் பளீர்' என்று மின்னலைப் போல ஜ்வலித்தது.

மிருகமாக மாறிக் குகையிலேவாழும் சீதளனைச் சந்திக்க விஜயனை அழைத்துக் கொண்டு கிளம்பினான் குண்டோதரன். அடர்ந்த காட்டுப் பகுதியை விட்டு மலைகள் சூழ்ந்த பகுதிக்கு வந்தார்கள். தூரத்திலே கழுகுகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. ஒரு குன்றின் மீதிருந்து அதைக் காட்டினான் குண்டோதரன். ''அதோ கழுகுகள் வட்டமிடுகின்றதே, அங்குதான் ஒரு குகையில் அந்தக் கொடிய மிருகம் மாயத் தங்கத்தைக் காவல் காத்து வருகிறது. அதன் அருகே போவோர் யாரும் உயிரோடு திரும்பியதில்லை. அது உமிழும் அக்கினிக் குழம்பிலே வெந்து வெண்நீராகிப் போகிறார்கள். அப்படியொரு விஷ ஜ்வாலையைக் கக்கிக் கொண்டிருக்கிறான் சீதளன் என்ற அரக்கன்.''

குண்டோதரன் பேசிக் கொண்டிருந்தான். விஜயன் அதற்குப் பதில் சொல்லிக் கொண்டு அங்கு நிற்கவில்லை. வாளைக் கையிலேந்தி மௌனமாக அந்தக் குன்றிலிருந்து இறங்கித் தூரத்தே உள்ள குகையை நோக்கி நடந்தான். குண்டோதரன் தடதடக்கும் இதயத்துடன் 'விஜயனுக்கு வெற்றி கிடைக்குமா, அந்த மிருகத்தை வீழ்த்துவானா?' என்ற கவலையோடு ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டான்.

அஞ்சாநெஞ்சமுடைய விஜயன் கொஞ்சமும் கலங்காமல் சீதளன் இருக்கும் குகையை நோக்கிப் போனான். குகையை நெருங்க நெருங்க அனல் காற்று வீசலாயிற்று. குகையை நெருங்கும் போது பயங்கரமான உறுமல் ஒலி கேட்டது. அதையடுத்து ''யார் நீ? எங்கு வந்தாய்?'' என்ற குரல் ஒலித்தது.

விஜயன் பயப்படவில்லை. அதற்குப் பதில் வியப்படைந்தான். ''ஓ! நீ பேசுவாயா? அப்படியானால் நான் வந்திருக்கும் காரியத்தைக் கூறினால் நீ புரிந்து கொள்ளுவாய். கேட்டுக் கொள். உன்னைக் கொல்லவே நான் வந்திருக்கிறேன்'' என்றான். அவ்வளவுதான், அடுத்த வினாடி இடிபோன்ற அதிர்ச்சி ஏற்பட்டது. குகையே தகர்ந்து விடுவது போலப் பயங்கரமான ஓசையுடன் சீதளன் என்ற ராட்சத மிருகம் தனது பூதாகாரமான உடலை வெளியே நீட்டியது. அதன் வாயிலிருந்தும் மூக்குத் துவாரங்களிலிருந்தும் துருத்தியினால் ஊதப்பட்ட உலைக்களத்து நெருப்பைப்போல குபீர் என்று கொப்பளித்துக் கொழுந்து விட்டு தீ ஜ்வாலை வீசியது. விஜயன் வெகு லாகவமாக அதன் வீச்சிலிருந்து விலகிக் கொண்டான். ராட்சத மிருகத்தின் நெருப்பு மூச்சு வெகு தூரத்திலிருந்த ஒரு மரத்தைத் தாக்கி அதைத் திகுதிகுவென்று எரிய வைத்தது. தன் விரோதி தப்பி விட்டதைக் கண்ட சீதளன் முன்னை விடப் பயங்கரமாக ஊளையிட்டபடி குகையிலிருந்து வெளியே வந்தான். அவன் முழு உடலும் இப்போது வெளியே இருந்தது. நீண்ட வால். அதிலே ரம்பத்தைப்



போன்று ஈட்டி ஈட்டியாக எலும்புகள் துருத்திக் கொண்டிருந்தன. தேர் வடத்தைப் போன்றிருந்த அந்த வாலை சுழற்றி வீசியது மிருகம். அது மேலே விழுந்தால் அவ்வளவுதான். துவையலாகி விட வேண்டியது தான். சாட்டையைப் போலத் தன் வாலை இப்படியும் அப்படியுமாகச் சுழற்றித் தாக்கியது விஜயனை அந்த மிருகம். முன்னால் எரிமலையாக நெருப்புக் கக்கியது. பின்னால் முள்ளெலும்பு வாலைச் சுழற்றி வீசியது. விஜயன் வெகு தந்திரமாக அதன் தாக்குதல்களிலிருந்து தப்பித்து அதற்குப் போக்குக் காட்டி விளையாடினான். அதனால் அதன் வீம்பு அதிகமாகியது. நெருப்பைக் கக்கிக் கக்கிக் களைத்து போயிற்று. இப்படி அதை அலைக் கழித்து ஆயாசமடையச் செய்ய வேண்டும் என்பதே விஜயனின் திட்டம். திட்டமிட்டபடியே நடந்தது. தன்னைத் தாக்க வந்தவனைக் காணாது திகைத்துத் திணறிய நிலையில், விஜயன் அதன் முன்னங்கால்களுக்கு அருகே, இதயத்துக்கு நேரே நின்று கொண்டிருந்தான். பதுங்கி ஒளிந்து ஒளிந்து அதன் பார்வைக்கு அகப்படாமல் அங்கு வந்து விட்டான். அதுவோ அவனை எங்கோ தேடிக் கொண்டிருந்தது. இந்த வேளையில் குண்டோதரன் உருவாக்கிக் கொடுத்த ஒப்பற்ற வாளைத் தன் இரு கைகளிலும் ஏந்தி, அதன் இருதயத்தை நோக்கித் தன் பலத்தை யெல்லாம் ஒன்று கூட்டி, ஒரே பாய்ச்சலாகப் பாய்ச்சினான். 'வீல்' என்று பயங்கரமான மரண ஓலம் எழுப்பியது சீதள மிருகம். சுருண்டது, புரண்டது வாலைத் தரையில் படீர் படீர் என்று அடித்து ஆர்ப்பரித்தது. வாள் செருகிய இடத்திலிருந்து ரத்தம் அருவியாகப் பெருகியது. அப்படிப் பெருகிய குருதி, எரிமலைக் குழம்பு போலத் திருதிருவென்று எரிந்தபடியே ஓடியது.

ராட்சத மிருகத்தின் ஆவி அடங்கியது. தீயும் அணைந்தது. குன்று ஒன்று உருண்டது போல மல்லாந்து கிடந்த அந்த வல்லமை மிக்க மிருகத்தின் மீது வெற்றி வீரனாக வீர விஜயனாக ஏறி நின்றான் அவன். இவ்வளவையும் தூரத்திலிருந்து பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த குண்டோதரன் இப்போது ஓடோடி வந்தான் விஜயனை நோக்கி.

(தொடரும்)

தெரியுமா ?



2122. பைன் ஆப்பிள் ஜூஸ் அடைக்கப்பட்ட டின்னின் மூடியில் ஒரு துவாரம் செய்து கவிழ்த்தால் உள்ளிருக்கும் திரவம் விழுவதில்லை. இரண்டு துவாரம் செய்த பிறகே வெளி வருகிறது. ஏன் ?

2123. உட்குழிவான இரு அறை வட்ட வடிவிலான பித்தளைக் குண்டு களைச் செய்து அவ்விரண்டும் சேரும் பகுதியைப் பித்தளை வளையம் கொண்டு அடைத்து ஒரு பரிசோதனையை நிகழ்த்தினார் ஒரு விஞ்ஞானி. இவர் யார், இது எதை விளக்கும் சோதனை?

2124. ஓர் உலோகத்தைக் கொண்டு மற்றோர் உலோகத்தின் மீது மின் சாரத்தைப் பயன்படுத்திப் பூச்சுக் கொடுப்பதற்கு என்ன பெயர் ?

2125. காற்று மண்டலத்தில் ஒலி அலைகளின் உத்தேச வேகம் என்ன என்று தெரியுமா ?

2126. சாக்ஸஃபோன் என்ற இசைக் கருவியைக் கண்டு பிடித்தவர் யார் ?

2127. லண்டனில் உள்ள புகழ் பெற்ற கடிகாரமான 'பிக்பென்' யாருடைய நினைவாகப் பெயரிடப் பட்டுள்ளது என்று தெரியுமா ?

2128. இந்தியச் சக்கரவர்த்தினி என்று விக்டோரியா மகாராணி தன்னை எந்த ஆண்டில் பிரகடனப்படுத்திக் கொண்டார் ?

2129. பிரிட்டனை ஆண்ட முதல் ஹனோவர் வம்சத்து அரசர் யார் ?

2130. ஸ்பெயின் தேசத்து அரசரான ஃபிலிப்பை மணந்த பிரிட்டிஷ் அரசியின் பெயர் தெரியுமா ?

2131. மின்சார விளக்குகளில் உள்ள ஃபிலமெண்ட் எந்த உலோகத் தால் ஆனது ?

2132. $C_{12}H_{22}O_{11}$ — இது ஒவ்வொரு வீட்டிலும் புழக்கத்தில் உள்ள ஒரு பொருளின் ரசாயனக் குறியீட்டுப் பெயர். இந்தப் பொருள் என்ன?

2133. மின்சார உற்பத்தி சாதனத்தை (Electric Generater) முதன்முதலில் கண்டவரின் பெயர் என்ன?

2134 கண்ணின் வண்ணப் பகுதிக்கு (கருவிழி) ஆங்கிலத்தில் என்ன பெயர்?

2135. ஷேக்ஸ்பியரின் புகழ்பெற்ற நாடகமான மாக்பெத்தில் வரும் ஒரு பாத்திரத்தின் பெயரில் பிரிட்டனில் ஒரு துறைமுகமே உள்ளது. அது எது ?

2136. ஸ்காட்லாந்தின் ஒரு புகழ் மிக்க நகரம் முன்பு ஒரு காலத்தில் ஆல்ட் ரீகி (Auld Reekie) என்று அழைக்கப்பட்டது. அது எது ?

2137. பொட்டல்வெளி (Barren Ground)யில் வாழும் கார்போ (Caribou) என்ற மிருகம் எங்குள்ளது தெரியுமா?

2138. அற்புதமான பல வண்ணங்கள் உள்ள ஒரு வகைக் கிளிகள் எங்கு வாழ்கின்றன, இவற்றின் பெயர் என்ன?

2139. பிரிட்டனின் முதல் ஜெட் விமானம் விண்ணிலே பறந்தது எப்போது ?


2140. ரோமானியர்களால் குப்ரம் (Cuprum) என்று அழைக்கப்பட்ட உலோகம் எது ?

2141. ஏழு தங்கப் பதக்கங்களை ஓர் அமெரிக்க நீச்சல் நிபுணர் 1972 ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தட்டிக்கொண்டு போனார், அவர் பெயர் தெரியுமா ?

2142. குத்துச் சண்டை வீரர் முகம்மதலியின் முதல் பெயர் என்ன தெரியுமா ?

2143. ஏசுபிரானுக்கு ஜான், ஞான ஸ்நானம் செய்வித்தது எந்த நதியில்?

தெரியுமே!



2122. உள்ளிருப்பது வெளிவர வேண்டுமானால் அதன் இடத்தை நிரப்ப வெளியிலிருந்து ஏதாவது (காற்று) உள்ளே போகவேண்டும். ஒரு துவாரம் செய்தால் உள்ளிருக்கும் திரவம் அதை வழிமறித்து அடைத்துக்கொள்ளுகிறது. இன்னொரு துவாரமிட்டால் அதன் வழியே காற்று உள்ளே போய் திரவத்தை வெளியே தள்ளுகிறது. 2123. விஞ்ஞானி வான் கெரிக். சோதனை சூன்யத்தை விளக்க. 2124. எலக்ட்ரோ பிளேட்டிங். 2125. மணிக்கு 760 மைல்கள் வேகம் (ஐந்து விநாடிக்கு ஒரு மைல்). 2126. அடால்ஃப் ஸாக்ஸ். 2127 சர் பெஞ்சமின் ஹால் என்பவரின் நினைவாக. 2128. ஜனவரி மாதம் முதல் தேதி 1877ம் ஆண்டு. 2129. முதலாம் ஜார்ஜ். 2130. முதலாம் மேரி. 2131. டங்ஸ்டன் என்ற உலோகத்தினால். 2132. சர்க்கரை. 2133. மைக்கேல் ஃபாரடே. 2134. ஐரிஸ் (Iris). 2135. மாக்டஃப் (Macduff). 2136. எடின்பரோ நகரம். 2137. வட அமெரிக்காவின் ஆர்க்டிக் ஜில்லாக்களில். 2138. ஆஸ்திரேலேஷியாவில் லோரி (Lory) என்று பெயர். 2139. மே மாதம் 1941ம் ஆண்டு. 2140. காப்பர் - தாமிரம். 2141. மார்க் ஸ்பிட்ஸ் (Mark Spifz). 2142. காஸியஸ் க்ளே. 2143. ஜோர்டான் நதியில்.

கோகுலத்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்.

GOKULAM Childrens Fortnightly
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 50 மலேயா காசு